போன் நெ. 15. விலை 2 அணு. REGD. NO. 4642

திராவிடநாடு

மலர் 13 | 7—11—54 | இதழ் 19

கொட்டிக் கொடுத்தபின் தட்டிப் பேசாமலிருப்பரோ

நேற்றுக்கூட வந்துபோனேன்!

சொன்ஞர்கள்.

வெளியில் போயிருந்தீர்களாம்...... வெகுநேரம்வரையில்......

வேலைத் தொல்லைதான். என்ன செய்வது. தெரியாமல் நாஞக இக் கட்டில் சிக்கிக்கொண்டேன். அலைகிறேன், அவதிப்படுகிறேன், சரியான தூக்கம் உண்டா, வேளா வேளைக்குச் சாப்பாடு உண்டா, நாய் படாதபாடு என்பார்களே, அதுபோல் இருக்கிறது நம் வாழ்வு......

உங்களுக்குச் சிரமம் கொடுக்க வேண்டும் என்கிற எண்ணமில்லை, ஆனாலும் எனக்கு இப்போது......

சிரமமா! செச்சே! சிரமம் என்று சொன்ஞல் போதாதம்மா, போதாது. சித்ரவதை செய்யப்படுகிறேன். மாவுமில் நல்ல இலாபம் தரக்கூடிய தொழில். நான் போட்ட புள்ளிப்படி தொழில் நடந்தால், மாதம் என்ன குறைந்தாலும், முன்னூறுக்குப் பஞ்சமில்லை......

அப்படித்தான் சொன்னீர்கள்......

தீர்மானமாகச் சொன்னேன்—பலன்?—போட்ட பணத்தையே கரைத்துவிடுவார்கள்போலிருக்கிறதே......நாளுக்கு நாள் நகர்ந்ததடி அம்மானை என்று ஆகிவிட்டது......

ஏனுங்க......!

ஏஞ! எல்லாம், என்ஞல்தான், பத்து பேர் பிழைப்புக்கு வழியாக இருக்கட்டும், போட்ட பணத்துக்குக் கொஞ்சம் இலாபமும் கிடைக்கட்டும் என்று நினைத்தேன் பாரு, அதஞலே வந்த வினைதான். உள்ளே புகுந்து கொண்டு, இருப்பதைப் பாழ் செய்கிருனுங்க......எதைன்னு நான் கவனிப்பேன்–மெஷின் கோளாறிலேஇருந்து மேஸ்திரியோட கணக்கு வழக்கு வரையிலுமா கவனிச்சித் தொலைக்கறது. மனுஷன் என்ன ஆகிறது. மங்கம்மா! ஏண்டா இந்தத் தொல்லையைத் தூக்கித் தோளிலே போட்டுக்கொண்டேன்னு, இப்ப நான் ஏக்கப்பட்டுச் சாகறேன்.

ஏனுங்க, கெட்ட பேச்சு — விட்டுத் தள்ளுங்க. வேலையை ஒழுங்காச் செய்யாததுங்களை விரட்டிப் போட்டு நல்ல ஆளாப் போட்டுப் பாருங்க......

நல்ல ஆளு! அதுவும் நான்தானே பார்த்துத் தேடிக் கண்டுபிடித்து, ஐயா அப்பான்னு நல்ல பேச்சுச் சொல்லி கொண்டுகிட்டு வந்தாகணும்......சரி, செய்யலாம்...செய்யலாம்ஞ அதுக்கு நேரம் கிடைக்கவேண்டாமா! எங்கே கிடைக்குது நேரம். கரும்புப் பயிர் வைத்தேஞ அறுபது ஏகரிலே...அது கள்ளிக்காடு...அதைத் திருத்தி அயஞக்கி உரம்போட்டு, ஊர்லே இது வரையிலே யாருமே போடாத தரமான கரும்பு போட்டேன் — தென்னை மரம் கெட்டுது போ, அப்படி ஓங்கி வளர்ந்தது, ஊர் 'ஒம்மலு', அவனவன் அடே அப்பா! இது என்ன கைராசிடான்னு பேசிஞன்; கடைசியிலே பாரு, நம்ம போருத வேளை.........இன்னதுன்னு தெரியல்லே, எந்த மருந்துக்கும் சாகல்லே, பயிரை வேர்வரைக்கும் அரிச்சித் தள்ளுது ஏதோ ஒரு பூச்சி—செக்கச் செவேலுன்னு இருக்குது ...என்ன செய்யறது...கொஞ்சமாவா போட்டிருக்கு......உன் பணம் கூட அதிலே கொஞ்சம் செலவாகியிருக்கும், மூணுக்குக் குறையாது, மொத்தத்திலே இருபதிஞயிரம் ரூபாய் நஷ்டம்.

நான், வந்துங்க......ஒரு அவசரமான காரியமா.........என் மருமவன் ஒரு ஆயிரம் ரூபா கடஞ கேட்குது... அதஞலே......

பார்ரேன்! நீ உன் கஷ்டத்தைச் சொன்னதும் எனக்கு நம்ம வட்டிக் கடை கவனம் வந்தது.........அதிலே அந்த அதிகப் பிரசங்கி மானேஜர் இருக்கானே, அவன் என்ன செய்தான் தெரியுமா, வெட்கக் கேடு வெளியே தெரிந்தா......தெருவிலே போகிற திம்மப்பனுக்கெல்லாம் கடனைக் கொடுத்துவிட்டு, கடுதாசியைக் கத்தை கத்தையாக் கட்டிவைத்திருக்கி

ருன். கண்டபடி ஏசிவிட்டேன். கடையையே மூடிவைத்து இருக்கறேன்—கோர்ட்டைச் சுத்திச் சுத்தி வருது கழுதை! உங்க மூத்தாரோட பணம்தான் அதிலே அதிகமா சிக்கிக் கொண்டது......நாற்பதுக்குக் குறையாது...நாமொன்று நினைக்க தெய்வமொன்று நினைக்குது என்பாங்களே, அதுதான் இது.........மங்கம்மா! ஒரு விஷயத்தைமட்டும் நினைச்சா எனக்கு வேதனையாத்தான் இருக்கு — கோபமும் வருது—ஏதோ எல்லோருக்கும் பலன் கிடைக்கட்டும், நம்மாலே இலாபம் கிடைச்சதாகப் பேர் இருந்தாப் போதும் என்கிற எண்ணத்தாலே தான், நான் இத்தனை தொழில், மண்ணெண்ணெய் கடையிலே இருந்து மாவுமில் வரையிலே, ஏற்பாடுசெய்து, பெட்டியிலே போட்டு பூட்டிவைத்து விட்டு, பகலிலேயும் இரவிலேயும் பயந்து பயந்து கிடக்கறதைவிட தொழிலிலே பணத்தைப்போட்டுவைக் கட்டும், பலனும் கிடைக்கட்டும் என்கிற யோசனையைச் சொன்னேன், எல்லோரும், பணத்தைக் கொண்டு வந்து என்னிடம் திணிச்சி, பாரத்தைச் சுமடா பாண்டுரங்கான்னு சொல்லிவிட்டாங்க. நானும், ஏதோ நமக்குத் தெரிந்த நாலுவழியை மற்றவர்களுக்கு உபயோகப்படவைப்போம் என்கிற எண்ணத்திலே, சரி, சரின்னு சொன்னேன் — தொழிலும் துவக்கினேன்......படாதபாடு படுகிறேன்... ஒவ்வொன்றிலும் ஓட்டை ஒடிசல் ஒழுக்கல்...ஒவ்வொரு விஷயத்தையும் கவனிக்க நேரமும் போதவில்லை, உண்மையைச் சொல்லவேணும்னா புத்தியே தடுமாறுது, இப்படி நான் கஷ்டப்படும்போது, பணத்தைத்தான் கொடுத்துவிட்டோமே, இனி நமக்கென்ன, பய எப்படியாவது பாடுபட்டு தொழிலை நடத்தி இலாபத்தைக் குவிப்பான், நாம், நோகாமல் பங்கு கேட்டு வாங்கிச் சாப்பிடலாம் பலாச்சுளை போல என்று எண்ணிக்கொண்டிருக்காங்களே நியாயமா? நீ, ஏதோ பொண்ணாப் பொறந்த பொறப்பு, உன்னைச் சொல்லலே; மற்றவங்க என்ன ஆச்சு, எப்படி நடக்குதுன்னு ஒரு துளி அக்கரை காட்டினாங்களா! எல்லா இழவுக்கும் நானேதானா! எவ்வளவு நேரம் பிடிக்கும் எனக்கு, எல்லோரையும் கூப்பிட்டு, இதோ கணக்குப் புத்தகம், பிரித்துப் பார்த்துக்கோ, இதிலே மந்திரமில்லை மாயமில்லை, நீ போட்ட பணம் இவ்வளவு, அதுக்கு இன்னின்ன சாமான் இருக்கு...... அப்படின்னு சொல்லிவிட்டு, என் வேலை உண்டு நான் உண்டுன்னு இருந்துவிட......

ஐயயோ! அப்படி முடியுங்களா...... உங்களுடைய திறமையை நம்பி, உங்களுடைய வாக்குக்குக் கட்டுப்பட்டுத் தானே எல்லோருமே பணம் கொடுத்தது......

பணம் கொடுத்ததுன்னு சொல்லாதே மங்கம்மா! பணம் போட்டதுன்னு சொல்லு. பணம் எனக்காக அல்ல; என் தொழிலுக்கு அல்ல, உங்க தொழிலுக்குத்தான் எல்லாப் பணமும்!

ஒரு பேச்சுக்கு அப்படிச் சொன்னேனுங்க! எல்லோருக்கும் சேர்ந்த தொழில்தான்...

அதை மறந்துவிட்டு, என்னமோ, நான் கடன் வாங்கியிருப்பதுபோல எண்ணிக் கொண்டு, வட்டி கொடு, இலாபம் கொடுன்னு கேட்டா, எனக்குக் கோபம் வராது...! உங்களோட தொடர்பே வேண்டாம் என்று சொல்லிவிட எவ்வளவு நேரம் பிடிக்கும்.

பேர், கடன் என்று இருக்குது... ஆனா தொழிலிலே போட்ட பணம்னு தான் அர்த்தம்...

கடன்! கடன்! என்று கத்தினா, நான் என்ன செய்யமுடியும்? இல்லை திருப்பிக் கொடுன்னு கேட்டா-என்ன சொல்லமுடியும்— பணமா வேணும் பணம், வாங்கடாப்பா' பணம் கொடுத்தவனுங்களே, அதோ இருக்கு பாரு உங்க பணம் என்று சொல்லி, கரும்புத் தோட்டம், காய்கறிக் கிடங்கு, வட்டிக் கடை, மாவுமில், வாரச்சந்தை, இதை எல்லாம் காட்டவேண்டியது தான்......வேறே......! எனக்கென்ன வந்தது, எல்லாத் தொல்லையையும் தூக்கிச் சுமக்க...

*

ஊரார் பணத்தை வாங்கிப் பல தொழில்களில் போட்டு, நடத்துபவர்களில், நாணயத்தோடு நடக்கவேண்டும், யாரையும் மோசம் செய்யக் கூடாது என்ற நல்லெண்ணம் கொண்ட ஒருவரையே மேலே சித்தரித்திருக்கிறோம். ஊராரிடம் ஆசை வார்த்தை சொல்லி, அண்டப் புளுகு பேசிப் பணத்தைக் 'கரந்து' கொண்டு, கையாடல் செய்யும் கயவர்களைப்பற்றி அல்ல, இப்போது இங்கு குறிப்பிட்டிருப்பது, பலருக்கும் உபகாரம் செய்யும் நோக்கம் கொண்டவர் பற்றித்தான் குறிப்பிட்டோம். அப்படிப்பட்டவரே, பலருடைய பணத்தை வாங்கி, வகையற்றுப் பல தொழில்களில் போட்டுவிட்டு, தீட்டிய திட்டம் கெடக்கண்டும், எதிர்பாராத நஷ்டங்கள் ஏற்படக்கண்டும், சிந்தை குழம்பி, செய்வது என்னவென்று தெரியாமல், பெற்ற பணத்தைத் திருப்பித்தர மார்க்கமுமின்றி, கேட்ட நேரத்தில் அட்டியின்றிப் பணத்தைக் கொட்டிக் கொடுத்தவர் மீதே சீறி விழவும், தட்டிப் பேசவும் நிலைமை ஏற்படுவதையே இங்கு தீட்டினோம்-மோசடிக்காரன் உள்ளத்தின் படப்பிடிப்பு அல்ல.

*

இலாபம் கிடைக்கும் — அத்தகைய தொழில் — வீணில் ஏன் பணத்தைக் கட்டிக் காத்துக்கொண்டிருக்கிறீர்கள், இலாபம் பெறுங்கள் என்று கூறினால், கூறுபவருடைய தரத்தைப் பொறுத்தும், அந்தச் சமயம் கையிருப்பின் தரத்தினைப் பொறுத்தும், பணம் பெட்டியைவிட்டுக்கிளம்புகிறது! இந்தச்சூட்சமம் தெரிந்த இலாபச் சூதாடிகள் பாமரமக்களின் பணத்தைப் பல வழிகளில் பறித்து, ஏப்பம்விடும் பரிதாபகரமான கதைகள் பல உண்டு. பிரிட்டனில் ஒருபோது, பணம் நிரம்ப மக்களிடம் இருந்த நேரம் — மக்களிடம் வளமிருந்திருந்த காலம். அப்போது பலர் பல்வேறு வகையான தொழில்களைத் துவக்கி, இலாப ஆசைகாட்டி, மக்களிடம் பணம் பறித்தனர். சாதாரண சமயத்தில் சொன்னால் கைகொட்டிச் சிரிப்பார்கள், அப்படிப்பட்ட விசித்திரமான தொழில்களை எல்லாம் துவக்கினர் — பணம் கிடைத்தது. கேட்டதற்கு மேலாக, ஒரு துணிவுள்ள பேர் வழி, கடல் நீரைக் காய்ச்சி உப்பு உற்பத்திசெய்தால், ஏராளமான இலாபம் கிடைக்கும் என்று கூறி, அதற்காக ஒரு 'கம்பெனி' துவக்கினான். உப்புக்கு அப்போது ஒன்றும் பஞ்சமில்லை! எனினும் அவன் விளம்பரம் செய்த விசித்திரத் தொழிலுக்கு மக்களின் பணம் ஏராளமாகவும் தாராளமாகவும் கிடைத்தது. இன்னோர் பேர்வழி, இவனைத் தூக்கிவாரி அடித்துவிட்டான்! "இலாபகரமான தொழில்—ஒன்றுக்கு ஒன்பதுகூட இலாபம் கிடைக்கும்— உடனே முந்துங்கள்—பணம் போட்டுப் பங்கு பெறுங்கள்—பொன்னான வாய்ப்பு— ஏனோ தானோ என்று இருந்துவிட்டு பிறகு வருந்தாதீர்கள்—தொழிலின் விபரம் விளக்கம் பணம் சேர்ந்த பிறகு வெளியிடப்படும்—பெருத்த இலாபம் கிடைக்கும் தொழில் என்று மட்டும் இப்போது அறிவிக்கிறோம்— யூகமுள்ளோருக்கு அதிகம் கூறத் தேவையில்லை!" என்று விளம்பரம் செய்தான்! ஏராளமாகப் பணம் குவிந்தது. என்ன தொழில்? எப்படி பெருத்த இலாபம் கிடைக்கும்? தொழில் நடத்தப் போவதாகச் சொல்லிப்பணம் திரட்டுபவன் நாணயமுள்ளவனா, நம்பிக்கைக்கு ஏற்றவனா?—என்பனபற்றிக் கூடக்கேட்கவில்லை.—இலாபம் கிடைக்கும் என்றவுடன் பணம் கொடுத்தனர். இப்படிக் கிளம்பிய 'வெறி' கடைசியில் பெருத்த மோசடிக்கும் நஷ்டத்துக்கும், வழியாயிற்று. புல்லர்களும் புரட்டர்களும் புதுப்புதுக் கம்பெனிகள் துவக்கி, பொது மக்கள் பணத்தைக் கொள்ளை அடித்தனர். புற்றீசல் போலக் கிளம்பின போலிக் கம்பெனிகள்! பொது மக்கள் பணம் பாழாயிற்று! கம்பெனிகள் வீழ்ந்தன—'தென் கடல் குமிழி' என்று கூறப்படும் சம்பவம் இது! நீர் மேற் குமிழி போலக் கிளம்பின—அது போலவே அழிந்துபட்டன 'கம்பெனி

கள்'—கயவர்கள் கொள்ளையிட்டனர் கருத்தற்றோர் பணத்தை.

•

அதுபோன்ற புரட்டர்களின் விஷயம் என்றால் எவரும் இடித்துரைக்க, எச்சரிக்க, முன்வருதல் எளிதாக முடியும்—ஆனால் புரட்டு அல்ல, ஒரு ஆழ்ந்த நம்பிக்கை, தன் திறமையில், திட்டத்தில், அப்படிப்பட்ட நல்லவர் நாலுபேருடைய பணத்தைக்கொண்டு தொழில் நடத்தி, அது நசித்து, போட்ட பணம் பாழாகி விடுகிறது என்றால், கண்டனம் கிளம்பாதே எளிதில்; கண்ணீர் மட்டும் கிளம்பத்தான் செய்யும். கொட்டிக் கொடுத்தனர் பணத்தை! அவரும் கெட்ட எண்ணம் கொண்டவரல்ல! திட்டமோ பாழாகிறது! என் செய்வார்? பணம் கொடுத்த மக்கள் கிட்டே நெருங்கினாலே, அவர் தட்டிப் பேசுகிறார்.

*

தனிப்பட்டவர்களின் நடவடிக்கையிலே இத்தகு நிலைமை ஏற்படுகிறது. ஒரு நாட்டை ஆள்வோர் இது போன்ற செயலில் ஈடுபட நேரிட்டால் எப்படி இருக்கும் என்பதை எண்ணிப் பாருங்கள்.

*

இப்போது இந்திய சர்க்கார் பெற்றிருக்கும் கடன் — பல்வேறு இனங்கள் மூலம்—3014 கோடி ரூபாயாகும்.

சமீபகாலத்துக்கு முன்பு தேசியத் திட்டக் கடன் வசூலிக்கப்பட்டது நண்பர்களுக்கு நினைவிருக்கலாம், எதிர்பார்த்தபடி இந்தக்'கடன்' மளமளவென்று கிடைத்ததுபற்றி ஆளவந்தார்கள் அகமகிழ்ந்ததும் அனைவரும் அறிந்ததே.

பழைய கடனைப் பைசல் செய்யப் புதுக் கடன் பெறுகிறார்கள்.

ஐந்தாண்டுத் திட்டத்துக்காகக் 'கடன்' கேட்கிறார்கள், பெறுகிறார்கள்.

இங்ஙனம், 'இந்திய சர்க்கார்' பெற்றுவரும் கடன் 3014-கோடி ரூபாய்!!

மக்கள், சர்க்காருக்கு இவ்வளவு பெருந்தொகை 'கடன்' கொடுத்திட முன்வந்தது, சர்க்காரை நடத்திச் செல்லும் கட்சியிடம் மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கைக்குச் சான்று என்று கூறிப் பெருமைப்படும் 'கனம்கள்' இருக்கிறார்கள்.

புனிதத்திட்டம்—நாடு, பொன்னாடு, ஆகும் திட்டம் — கடன் தாருங்கள், கடமையைச் செய்யுங்கள் — என்று விளம்பரம் வீறிட்டு அலறுகிறது—விதவிதமான தோற்றங்களில் ஜவஹர் பண்டிதர் காட்சி அளிக்கிறார் சினிமா மூலம் செய்யப்படும் விளம்பரங்களில்—எல்லாப் பத்திரிகைகளும், ஆதரவு தருகின்றன—அதிகாரிகள், வெள்ளையர் காலத்திலிருந்து இந்தத் துறையில் நல்ல பயிற்சி பெற்றவர்கள், எனவே அவர்களுக்கு தட்டு, திறக்கப்படும்! என்ற வாக்கியம்மட்டுமல்ல, எங்கு, எப்போது, எப்படித் தட்டினால் திறக்கப்படும் என்பது தெரிகிறது, எனவே, 'கடன்' குவிகிறது! தஞ்சையைத் திருச்சி தோற்கடித்துவிட்டது! செங்கற்பட்டு, நான் மட்டமா என்று கேட்கிறது! நெல்லை, இதோ, இதோ, என்று அழைக்கிறது!! என்றெல்லாம் 'வெற்றி'ச் சங்கம்!! மேடையில் பேசுவோருக்கு, ஒரு ஐந்து நிமிஷம் 'டானிக்' கிடைக்கிறது. வறுமையில் வாடி அவதிப்படுபவன், ஆச்சரியத்தால் மூர்ச்சையாகிறான், ஏ! அப்பா! மூன்றாயிரம் கோடி ரூபாயா! ......இவ்வளவு பணமா இங்கு இருந்தது......இவ்வளவா இப்போது சர்க்காரிடம் தரப்பட்டிருக்கிறது......இவ்வளவும் நமது நன்மைக்காகவா செலவாகிறது.........இவ்வளவு செலவழித்துமா, நமக்கு வயிறாரச் சோறு இல்லை ....என்று எண்ணுகிறான், திகைக்கிறான்.

*

3014 கோடி ரூபாய்! இந்திய சர்க்கார் ஆண்டு ஒன்றுக்குப் பெறும் வரித் தொகை 453-கோடி! அதுபோல் ஏழு மடங்கு அதிகம் கடன்!

மக்களிடமிருந்து (மக்கள் என்றால் நானும் நீங்களும் அல்ல பேழையுடையார்!) சர்க்கார் பெற்றிருக்கும் இந்தப் பெருங் கடனுக்காக ஆண்டு ஒன்றுக்கு

[13-ம் பக்கம் பார்க்க]

இலங்கைத் தீவில்!

[I. இராமசாமி]

★

நின்றோங்கும் மலைகளுண்டு மலைத வழ்ந்து
நிலம் குளிர ஓடிவரும் நதிக ளுண்டு.
கொன்றழிக்கும் புலிசிங்கம் கரடி பாம்பு
கொடுமைபல செய்கின்ற உயிரி னங்கள்
என்றைக்கும் வாழ்ந்திருக்க அடர்ந்த காடும்
இருந்ததுண்டு பயங்கரமாய் எனினும் இன்று
பொன்கொழிக்கும் வளம்மலிந்து மக்கள் வாழும்
பொன்நிலமாய்த் தேயிலைகள் நிறைந்த துண்டு.

உருண்டுவரும் காட்டாறு பொழுது போக்கும்
ஓடைகளாய் அமைந்ததுண்டு உயர்ந்த காடும்
பரந்துவரும் நறுந்தென்றல் தழுவப் பூவைப்
பலர்கூடும் பூம்பொழில்கள் ஆன துண்டு
கருங்கற்கள் பசும்புற்கள் படியும் வண்ணம்
கனமலைகள் பண்பெற்ற துண்டு யாரும்
இரும்புவியில் ஆசியாவின் "சுவிட்சர் லாந்து"
எனும்படிக்கு இலங்கைநலம் பெற்ற துண்டு.

"பாடுபடும் தமிழ்மக்கள் உழைப்புச் செல்வப்
பயனிதுவாம்" எனஎவரும் அறிந்த துண்டு
கேடற்று வாழ்வதற்கு உகந்த அன்னார்
கிடைத்திருந்த வலிமையெலாம் இரத்த மெல்லாம்
"நாடற்று" வாழ்வதற்குப் பிழிந்து விட்டு
நடுத்தெருவில் இனியலைந்து மழையும் காற்றும்
போடுகின்ற சட்டமொரு புயலும் தாக்கப்
பொறுக்கின்ற உடலுண்டு உயிரு முண்டு.

கற்பனைக் கடிதம்

மக்கு மகாலிங்கத்துக்கு

கருத்து விளக்கத்துக்காக

மக்கு மகாலிங்கத்துக்கு,

மக்கு மகாலிங்கம்னு நோக்குப் பேர்வைச்ச வேளை தான் என்ன வேளையோ, அப்படியே பொருந்திப் போச்சு. உன் நடவடிக்கை எதை எடுத்தாலும், மக்கு மகாலிங்கம் என்கிறது ஸ்பஷ்டமாகிறது. தேவைப்படாத காரியத்திலேபோய் மாட்டிண்டு, தலை தப்பினது தம்பிரான் புண்யம்னு, பேந்தப் பேந்த விழிக்கிறாய். எல்லாம் தெரிந்த மாதிரியா பாவனை. உலகம் இன்னுமா ஏமாந்துண்டு இருக்கும்! உன்னோட சமர்த்தை உன் ஆம்படையாள்கூட மெச்சிக்கமாட்டா. பருப்பு வாங்கிண்டு வாடான்னா, வழியிலே போறவாளைப் பார்த்து, காலிலே செருப்பு இருக்கான்னு கேட்கறே! பிறகு, அவா, ஏதாவது கோபப்பட்டா பதைக்கறே, பதறரே, கதறரே! ஏன் உனக்கு வீண் வேலை,

சொன்னபடி செய்னு சொன்னா, நீயாக எதையோ எண்ணிண்டு, குழம்பிண்டு, அதையே பெரிய மேதாவித்தனம்னு எண்ணிண்டு, நேக்கே எழுதறே. தலைதலைன்னு அடிச்சிண்டு எங்காவது தேசாந்திரம் போகலாமான்னு தோண்றது. காலம் போற போக்குத் தெரியாமப்படிக்கு வீண் வேலைக்கெல்லாம் போறதா! கொஞ்சங்கூடத் தெளிவு இல்லை. நம்ம ராஜாஜியை நேரிலே தெரிசித்து, நம்ம ஊர் 'தெப்போற்சவத்துக்கு' திறப்பு விழா நடத்த வரணும்னு, அவரிடம் எப்படி எப்படிப் பேச வேணுமோ அப்படிப் பேசி, அவரோட சம்மதத்தை வாங்கி அனுப்பச் சொல்லி, நான் விவரமா கடிதம் எழுதினேன். மக்கு மகாலிங்கமாச்சே, விஷயத்தைப் புரிஞ்சிக்கறயோ இல்லையோன்னு, புட்டுப் புட்டு எழுதினேன். பத்து வருஷமா நம்ம ஊர் 'தெப்போத்ஸவம்' க்ஷீணித்து வர்ரது, பெரிய கோயிலிலே, ஏகத் தடபுடலா நடத்தறு, இந்தப் பைத்யக்கார ஜனங்களும்—குறிப்பா—பட்டிக்காட்டா — அங்கே கூடிண்டு கும்மாளமடிக்கறு,' ஆனதாலே, இந்த வருஷம், நம்ம 'தெப்போத்ஸவத்தை' ராஜாஜியைக் கொண்டு ஆரம்பிச்சி வைத்தா, பலன் இருக்கும். பத்திரிகைக்காராளெல்லாம் 'போட்டோ' போடுவா (மித்திரன் நிருபரே நேக்குச் சொன்னார்) பிரபல்யமாகும், ஜனக் கூட்டம் சேரும்னு, விவரமாக் கடிதம் எழுதினா, நீ, நான் சொன்ன காரியத்தைச் செய்யாமெ, நேக்கு யோசனை சொல்லக் கிளம்பிவிட்டே. உன்னைப்போல மண்டுகள் அதிகமாயிட்டா—அதனாலே தானே, இவ்வளவு கேவலமான ஸ்திதி.

ராஜாஜியை, தெப்போத்சவத்துக்கு அழைக்கலாமா, அவரோட அந்தஸ்து என்ன, அலுவல் என்ன, அவரைப் போயி இதற்கு அழைக்கலாமான்னு, நீ, என்னைக் கேட்கறே! மக்கு! நேக்கு அவரோட சிலாக்கியம் தெரியாதா! உனக்குத் தெரியாது! ராஜாஜி, இப்பத்தான், சென்னையிலிருந்து சிங்கப்பூருக்குச் செல்லும் சுதேசி கப்பல் ஆரம்பவிழாவுக்குப் போனார் — அங்கே பேசி இருக்கிறார் — கப்பல் தொழிலோட முக்யத்துவம், நம்ம பாரத தேசத்திலே அந்தத் தொழிலுக்கு இருக்கும் பாரம்பரியம், சிதம்பரம்பிள்ளையவாள் இதற்காகப் பட்ட கஷ்ட நஷ்டம் இதை எல்லாம் எடுத்துப் பேசியிருக்கார். நானும்தான் மித்ரனிலே பார்த்தேன். நன்னாப்பேசி இருக்கார். கப்பல் கம்பெனியோட முக்யஸ்தர் பாபா கூட, நம்ம ராஜாஜி இந்த வைபவத்துக்கு வந்தது நம்மோட பாக்யம்னு பேசியிருக்கார். நான் படிக்கல்லையா! நாட்டை ஆள்கிற காமராஜைக் கூடக் கூப்பிடல்லே, நம்ம ராஜாஜியைத்தான் அழைச்சா — டில்லியிலே அவரும் பாபாவும் ஒண்ணா உத்யோகம் பார்த்தவாளேன்னோ, அதனாலே! இவ்வளவும் தெரியும். அதனாலே? மக்கு! ராஜாஜி, கப்பல் ஆரம்ப விழாவுக்குப் போனதாலே, தெப்போத்சவ ஆரம்பவிழாவுக்கு வர மாட்டார்னு, எண்ணிட்டயா! உன் தலையிலே இடிவிழ! நம்மராஜாஜியா தெப்போத்சவத்துக்கு வரமாட்டார்!! ஆயிரம் கப்பல்கள் கட்டினாலும், அமெரிக்கா ஆஸ்திரேலியா போன்ற தூரதேசங்களுக்குப் பிரயாணம் செய்கிற அற்புதமான கப்பல் கட்டினாலும், ஒரு தெப்போத்சவத்துக்கு ஈடு ஆகுமா? சாதாரணமரக்கட்டைன்னுசிலபேர் பேசுவா! இது தெப்பம்—பகவான் இதிலே எழுந்தருளி இருக்கார்—என்ன அர்த்தம்! பைத்யக்காரா! "இந்தப் பிறவி ஒரு பெரிய சமுத்திரம், அதிலே, நீ, நீந்திக்கரை சேர முடியாது தெப்பம் வேணும். நான் தான் தெப்பம். இதிலே இடம் கிடைச்சா கரையேறலாம்"னு, பகவான் சொல்றார். தெப்போத்சவத்தோட தத்துவம் அதுதான். சிலபேர் இப்போ, குறள் படிக்கிறாளாம், அவா என்ன எண்ணிண்டு படிக்கறாளோ நேக்குத் தெரியல்லே—தெப்போத்சவத்தைப்பத்தி வள்ளுவர்—திருவள்ளுவர்னு சொல்லணும், இல்லையானா அவாளுக்குக் கோபம் வரும்— அழகாகப் பாடி இருக்கார்— பிறவிப் பெருங்கடல் நீந்துவர், நீந்தார் இறைவன் அடி சேராதார்—என்பது குறள், அதற்குப் பலபேர் பல மாதிரி அர்த்தம் சொல்லுவா: அதெல்லாம் தப்பு. உண்மையான அர்த்தம், பகவான் ஒரு தெப்பம் என்பதுதான்-என்று ராஜாஜி உபன்யாசம் செய்யக் கூடியவர். நீ, அவரோட மேதை தெரியாமல், கப்பல் ஆரம்ப விழாவுக்குப் போய் வந்தவர், தெப்ப உற்சவத்துக்கு வருவாரான்னு, என்னையே கேட்கறயே. மண்டு! மண்டு! பார்லிமெண்டையே பஜனை மடமாக்கிக் காட்டினரே, அப்போது கூடவா உனக்கு அவரோட குணாதிசயம் புரியல்லே. அவர் சட்டக் கல்லூரியிலும் பேசுவார், சந்தனக் கூடத்திலும் பேசுவார்! அணுகுண்டு ஆராய்ச்சிச் சாலையிலும் தலைமை வகிப்பார், ஆண்டாள் திருக்கலியாணத்துக்கும் விஜயம் செய்வார். அவருடைய நோக்கம் புரியறதில்லே, உன் போன்ற சில மக்குகளுக்கு. ஆனதாலே உடனே, அவரைப் பார்த்து, அவசியமா நம்ம தெப்போத்சவ ஆரம்ப விழ

வுக்கு வரவேணும் என்கிறதாகப் பேசி, அவரோட சம்மதத்தைப் பெற்று எனக்கு எழுது. யார் நீ? என்று கேட்டாரானு, நம்ம உறவினரைப்பத்திச் சொல்லு. மாஜி சேர்மனோட மச்சினன் என்பதைக் கவனப்படுத்து. காமா-சோமான்னு ஆட்சி இருக்கப்படாதுன்னு கட்டுரை எழுதி, காமராஜைக் கண்டித்தது, நான் தான் என்பதையும் சொல்லிவை. எப்படியும் தெப்போத்சவ ஆரம்ப விழாவுக்கு அவர் வந்தாகணும். அதிலும், கப்பல் ஆரம்ப விழாவுக்குப் போய்ப் பேசி இருக்கார்—அவரே, தெப்போத்சவ ஆரம்பவிழாவுக்கும் வந்தாத்தான், மகிமை இருக்கு. ஆகவே, அவசியமா, இதை முடித்துவைத்துவிட்டு, மறு வேலை பார்க்கணும். அடிக்கடி பேரம்பி, அனுவசியமான காரியத்திலே மாட்டிண்டு, தத்துப்பித்துன்னு உளறி அவஸ்தையைப் படாதே, காலம் நல்லா இல்லே! அவ்வளவு தான் சொல்லலாம்.

இப்படிக்கு,

காரியவாதி கணபதி சாஸ்திரிகள்.

★

★ தண்டால் எடுக்கிறார்! ★

"பிடி! பிடி! விடாதே!! ஆகட்டும்! அடடே! இவ்வளவுதானு உன் வீரம்? ப்பூ! ப்பூ! அசகாயச் சூரன் நான் இருக்கிறேன், உனக்கு உதவி செய்வேன் — தக்க சமயத்தில் — இதோ உடுக்கை அடிக்கிறேனே அது போதாதா, இந்தச் சத்தம் சாமான்யமானதல்ல, அண்டசராசரங்களையும் கிடுகிடுக்க வைக்கும் சக்தி வாய்ந்தது, எதையும் சுக்குநூறுக்கிவிடும் சக்தி கொண்டது—இந்தச் சத்தம் போதாதா உனக்கு, யோசிக்காதே, கிளம்பு, உம்! விடாதே! நீ போகாவிட்டால் என்ன, கோழை என்றுதானே கேலி செய்வார்கள், செய்து கொண்டு போகட்டும், என்று எண்ணுதே, நான் சாமான்யப்பட்டவனில்லே, தெரிகிறதா, சாதாரண 'கிளார்க்'காகத்தான் வாழ்க்கையை ஆரம்பித்தேன், பிறகு ஒரே தாவு தாவினேன், தலைவனுனேன்!—எப்படி என்கிருயா, இரகசியத்தைச் சொல்லக்கூடாது, இருந்தாலும் சொல்லிவைக்கிறேன், கலப்புமணம் செய்துகொண்டேன், வீரனே! தீரனே! பகுத்தறிவாளனே! என்று பலரும் புகழ்ந்தனர், பிறகு படிப்படியாக உயர்ந்தேன்—படிகள் ஏறும் போது ஈ, எறும்பு, பூச்சி, புழு, சாகத்தானே செய்யும்—செத்தன—அது பெருங்கதை—பிறகோர்நாள் கூறுகிறேன்—இப்போது நான் சொல்வதைக் கேள்—அதோ போகிருன் ஜன்மப்பிறவி எதிரி, பேய் மகன், பிடி, அடி, உதை!" என்று உசுப்பினுர், அவசரசாமி. இவ்வளவு 'கர்ஜனை' செய்து, வீரப் பிரதாபம் பேசும், இந்த மாவீரர், அந்தக் காரியத்தைச் செய்யாமல், ஏன் என்னை ஏவிவிடுகிருர் என்று எனக்குப் பலமான சந்தேகம். "அண்ணேன் அவன் போய்த் தொலைக்கட்டும். நம் வழிக்கு வந்தால் கவனித்துக் கொள்ளலாம்" என்றேன்.

"தத்துவம் தெரியாத சிறுவன் நீ. கதை கூத்து இதற்குத்தான் லாயக்கு. 'கசரத்' பழகாதவன். அந்தப் பேயன் இருக்கும்வரையில் நமக்கு — உனக்கும் தான் — பேராபத்து. ஆகவே, முதலில் அவனை ஒழித்துக்கட்டு. துரத்து! துரத்து! விரட்டு! விரட்டு! விடாதே! பிடி! அடி! உதை" என்று மீண்டும் பெருங்கூச்சலிட்டார்.

"அந்தப் பேயன்போலவே, அவனுடைய போக்கு நோக்கு, நடைநொடி பாவனை, நம்பிக்கை எல்லாம் வைத்துக்கொண்டு 'நம்மவர்களே' ஏராளமாக இருக்கிருர்கள் அண்ணேன்! அவர்களைத் திருத்திவிடுவதுதான் நல்லது; பிறகு இந்தப் பேயனுக்கு பிழைப்பு இராது!" என்றேன்.

"நீ கோழையல்ல—நீ துரோகி—ஆமாம் — துர்ர்ர்ரோகி" என்று பல்லைக் கடித்துக்கொண்டு கூவினுர். பாவம்! பரிதாபமாக இருந்தது. சரி, போய்த்தான் அந்தப் பேயை விரட்டுவோம் என்று நடந்தேன். ஒரு திருப்பம், அதன் பக்கம் போகும்போது, சிரிப்பொலி கேட்டது. சந்தடி செய்யாமல், வேறு பக்கமாக நடந்து, ஏவிவிட்ட சூரப் புலிக்குப் பின்புறம் வந்து பார்த்தேன். அனியாயத்தை என்னென்பது, ஒரு முக்காடிட்ட உருவத்திடம் 'ஏகஜோராக'ப் பேசிக் கொண்டிருந்தார், ஏவிவிட்ட ஏந்தல்.

"பயலைக் கிளப்பிவிட்டுவிட்டேன். இனிச் சரியாக மாட்டிக்கொள்வான். இவனும் கூட்டமும் கூண்டோடு ஒழியும். பலாத்காரம் செய்வது இலேசானதா! குறைந்தது பத்து வருஷ தண்டனை கிடைக்கும். இதுகள் உள்ளே போனதும், நமக்கு யோகம்! எல்லாம் நம்மிடம்!! இஞ்சி தின்ற குரங்குபோல, இதுகள், உள்ளே கிடக்கும். நான்தான் பிறகு, பிரசாரம்!! இதுகளின் கூட்டமே சட்டவிரோதமாகிவிடும்! பிறகு நான் தான் தனிக் காட்டுராஜா!!"

என்று பேசினுர் ஏவின பேர்வழி.

எதிரே முக்காடிட்டுக் கொண்டிருந்த உருவம்,

"உங்கள் சமர்த்து யாருக்கு வரும்! ஆனுல், இந்த நிலைமை ஐயாவுக்குத்தானே இலாபம். உமக்கு எப்படி இதனுல் இலாபம்?"

என்று பேசிற்று.

"ஐயா! உம்! ஐயா என்ன இனி!! எல்லாம் இனி இந்த ஐயா வைத்ததுதான் சட்டம்! எனக்கு அந்த ஐயாவை, எப்படி எப்படி அழைத்துச் செல்லவேண்டும், எங்கெங்கு அழைத்துச் செல்லவேண்டும், எப்போது அழைத்துச்செல்லவேண்டும் என்ற 'வித்தை' தெரியும்!! எனக்கு அந்த வித்தை தெரியும் என்பது ஐயாவுக்குத் தெரியாது!"

என்ருர்.

"அதுதான் தவறு; உடுக்கையாரே! அதுதான் தவறு! உமது வித்தை ஐயாவுக்கு நன்ருகத் தெரியும். உம்முடைய 'சீடத்தனம்' எவ்வளவு விலைகொடுத்து வாங்கப்பட்டது என்ற கணக்கே

இருக்கிறதே அவரிடம், எத்தனை தடவை உம்மை ஆஸ்ரமத்திலிருந்து அடித்துத் துரத்தினார், ஆண்டிக்கோலத்தில் நீர் யாரார்ரை எடுத்தீர் எவரெவருக்கு என்னென்ன கடிதம் எழுதினீர் — ஆஸ்ரமத்தை அழிக்க என்னென்ன 'யாகம்' செய்தீர், என்பன எல்லாம் கூட ஐயாவுக்குத் தெரியுமே!!"

என்றேன். ஏவிஎ பேர்வழிக்கு தூக்கிவாரிப்போட்டது. "படுபாவி! நீ, அந்தப் பேய்மகனைத் துரத்திக் கொண்டு போகவில்லையா?" என்று பதறிப் போய்க் கேட்டார்.

"நாளு! வீரமார்த்தாண்டரே! அயலாத்து நெய்யே, என் பெண்டாட்டி கையே! என்ற பழமொழிப்படி நடப்பவர் நீர், என்பது எனக்கா தெரியாது. 1001 இரவுகளுக்கு மேல் இருக்குமே, தங்களோடு பேசிப் பேசிப் பேசி, தாங்கள் எப்படிப்பட்ட 'நற்குணவான்' 'வீரர்' 'தன்னலமற்ற தியாகி' 'நல்லவருக்கு அடங்கி நடப்பவர்' என்பதை எல்லாம் நன்கு அறிந்து கொண்டவனாயிற்றே, நானா, உமது பேச்சிலே ஏமாறுவேன்! புர்ர்ரட்சி செய்யும், நான் உமது பொற்பாத கமலம் பட்ட தூசியை எடுத்து, உலகுக்கே, கிடைத்தற்கரிய 'தேசியத் திருமண்' என்று தருகிறேன், ஆனால் எதிர் வீட்டுக் குழந்தையைக் கொண்டு, உம் வீட்டுக் கிணற்றின் ஆழம் பார்த்துக் கொள்வாரீர். வைதீகமிருக்கிறதல்லவா உமக்கு! நீர் பேசும் தத்துவத்தில் உமக்கு நம்பிக்கை இருக்கிறதல்லவா! நாடே உமது சொல் கேட்கக் காத்துக் கொண்டிருக்கிறது என்ற அளவுக்கு உமக்குப் போதை ஏறிவிட்டதல்லவா! ஐயாவே, என் சொல்படித்தான் நடப்பார் என்று பெருமை பேசுகிறீர் அல்லவா, பிறகு, என்ன யோசனை, உம்! கிளம்பும்! உமது திட்டத்தை நிறைவேற்றக் கிளம்பும், எந்தப் பயல் வந்தால் என்ன, வராவிட்டால் என்ன? சிங்கம் நீர்; நீர் கிளம்பும்போது சிற்றெலிகளின் துணை எதற்கு உமக்கு! எங்கே பார்க்கலாம், கிளம்பும்!! அதோ பகைக் கூட்டம்! அங்கு, என்னை ஏன் ஏவுகிறாய், புறப்படு நண்பா! புறப்படு! பெரியாரே கண்டு ஆச்சரியப்படும் படியான பெரும் புர்ர்ரட்சி செய்! உம்! பழக்கமான காரியமாச்சே!! எத்தனை தழும்புகள்! எவ்வளவு தியாகம்!! இன்னும் என்ன தயக்கம்."

என்று கூறினேன். "இரு! இரு! உன்னை ஊசி போட்டே ஒழித்துக் கட்டிவிடுகிறேன்" என்றார்.

"என்னை ஒழிப்பது கிடக்கட்டுமய்யா, நான் சாமான்யன் — தற்கொலை செய்துகொள் என்று ஐயா சொன்னால் போதும், உமக்குக்கூட வேலை இல்லாமல், நானாகவே பொது வாழ்விலிருந்து ஒழிந்து கூடப் போவேன் — உம் வீர தீர பராக்கிரமத்தை, அதோ போகிறானே, பேய் மகன், அவனிடம் காட்டுமே அதற்கு ஏற்ற ஆட்சி வந்திருக்கிறது என்று வேறு பீத்திக் கொள்கிறீரே!—" என்று கூறினேன். உடனே நண்பர், வேக வேகமாகக் கீழே படுத்தார்— என்னடா இது கர்மம்! என்று பயந்துபோனேன் — வேறொன்றுமில்லை — 'தண்டால்' போட ஆரம்பித்தார்!!

★

குறள் நெறி விழா

சென்னை அக்டோபர் 30-ந் தேதி சென்னை நுங்கம்பாக்கம் குறள் நெறிக் கழகத்தினர், பெரு முயற்சியுடன் அக்டோபர் 23 முதல் 28 வரை ஏற்பாடு செய்திருந்த குறள் நெறி விழாவையொட்டி 23-ம் நாள் காலை மாபெரும் ஊர்வலம் ஒன்று சிறப்புற நடைபெற்றது. சென்னையில் விடாது பெய்த அடைமழை காரணமாக ஏனைய விழா நிகழ்ச்சிகள் இரண்டு நாள்கள் தள்ளி வைக்கப்பட்டு 25-10-54 முதல் துவங்கி 30—10—54 முடிய சீரும் சிறப்புடன் நடைபெற்று இனிது முடிந்தன.

முதல் நாள் நிகழ்ச்சி

நுங்கம்பாக்கம் அவ்வையார் சாலைத் திடலில் அமைக்கப்பெற்றிருந்த அணிபெரு பந்தலில் 25—10—54 மாலை 5-மணிக்கு விழா நிகழ்ச்சிகள் துவங்கின. விழாத் துவக்கத்தில் வரவேற்புக் குழுத்தலைவர் **வ. சங்கரநாராயணன்** அனைவரையும் வரவேற்றுப் பேசினார், அ. கு. பொதுச்செயலாளர் **பூ. கணேசன்** தலைவரை முன்மொழிந்து சிறிதுநேரம் பேசினார். பன்மொழிப் புலவர் **கா. அப்பாதுரை எம். ஏ. எல். டி.** அவர்கள் விழாவிற்குத் தலைமை தாங்கினார்கள். தலைவர் தம் உரையில் வள்ளுவர் தமிழ் மரபில் பிறந்து உலகியல்புகளனைத்தையும் முற்றும் உணர்ந்த முதற்பெரும் புலவர் என்றும், உலக அறிவு நூலை அளித்த பேரறிஞர் என்றும் குறிப்பிட்டார்.

பிறகு தென்றல் ஆசிரியர் **கவிஞர் கண்ணதாசன்** பேசுகையில், திருக்குறளின் முதல் குறளுக்குப் பரிமேலழகர் கொண்ட உரைக்கும், பகுத்தறிவுப் புலவர்கள் கண்ட உரைக்கும் உள்ள வேறுபாட்டை விளக்கி, பகவன் என்ற சொல் பகலவனைத்தான் குறிக்கும் என்பதை வலியுறுத்தினார். மேலும், வள்ளுவரின் சொல்லமைப்பு முறையையும் கருத்தாழத்தையும் எடுத்து விரித்துரைத்தார்.

டி. பி. ராஜராஜேஸ்வரி எம். ஏ. அவர்கள் பேசுகையில் இன்பத்துப் பாலில் சில மேற்கோள்களை எடுத்துக் காட்டி, வள்ளுவரின் சொல் நயத்தையும் பொருள் நயத்தையும் விளக்கினார்.

புலவர் நன்னன் அவர்கள் குறள் நெறிச் சிறப்பைக்குறித்துச் சிறிது நேரம் பேசியபின், முரசொலி ஆசிரியர் **கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள் பேசினார்கள். அவர் பேசுகையில் "கடுகைத் துளைத்து ஏழ்கடலைப் **புகட்டிக் குறுகத் தறித்த குறள்**" என்பதைத் தக்க சான்றுகளுடன் விளக்கினார். "இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த வகுத்தலும் வல்லது அரசு" என்ற குறளை எடுத்துக்காட்டி, இன்றைய ஆட்சியாளருக்கு அறிவுறுத்தினார். எழுச்சியூட்டும் வகையில் அவரது சொற்பொழிவு அமைந்தது.

இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள்

26—10—54 மாலை 5-மணிக்கு

இரண்டாம் நாள் விழா நிகழ்ச்சிகள் துவங்கின. வ. கு. தலைவர் வ. ச. முன்மொழிய பூ. க. வழிமொழிய பச்சையப்பன் கல்லூரித் துணைத் தமிழ்ப் பேராசிரியர் **க. அன்பழகன்** அவர்கள் விழாவிற்குத் தலைமை தாங்கினார்கள். தலைவர் பேசுகையில் திருக்குறளின் தனிச் சிறப்பைத் தக்க கருத்துக்களுடன் அழகுபட விரித்துரைத்து, சூழ்ச்சிக்காரர்களால் குறள் மறைக்கப்பட்டமையை எடுத்துக் கூறி, குறள் நெறியின் இன்றியமையாமையைப் பற்றி நீண்டதோர் அறிவுரை நிகழ்த்தினார். அடுத்து, பச்சையப்பன் கல்லூரித் துணைத்தமிழ்ப் பேராசிரியர் **வடிவேல் நாயகர்** அவர்கள் "குறள் நெறியும் தமிழ் நாடும்" என்பது பற்றி கருத்துமிக்க சொற்பொழிவு ஆற்றினார்.

பின்னர் வழக்கறிஞர். **P. R. கோகுலகிருஷ்ணன், B.A., B.L.,** பேசுகையில் திருக்குறள் உலக முழுமைக்கும் நீதி விளக்கும் ஓர் சட்ட நூல் என்பதை மேற்கோள் பல காட்டி விளக்கினார்.

செந்துறை (திருச்சி) மாவட்டக் கழக உயர் நிலைபள்ளித் தமிழாசிரியர் **வை. பொன்னம்பலனார்** பேசிய போது, நல்ல தமிழ் நாடெங்கும் நிலவவேண்டுமென்றும், தமிழாசிரியர்களாக உள்ளவர்கள் குறள் நெறியைத் தமிழகத்தின் மூலை முடுக்குகளிலெல்லாம் பரப்பக் கடப்பாடு கொள்ளவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

இறுதியாக "நம் நாடு" பொறுப்பாசிரியர் **காஞ்சி கல்யாணசுந்தரனார்,** திருக்குறளில் காட்டப்பட்டுள்ள இறைத் தன்மையை எடுத்துக் காட்டி இக்காலத்தில் வளர்ந்திருக்கும் புராண மத பிரசாரங்களை வன்மையாகக் கண்டித்துப் பேசினார்.

இரவு 10 மணிக்கு **மணிவண்ணன்** குழுவினரின் கண்ணகி (வழக்குரை காதை) ஓரங்க நாடகம் நடைபெற்றது.

மூன்றாம் நாள் நிகழ்ச்சிகள்

27-10-54 மாலை 4 மணிக்குத் துவங்கியது. தமிழிசைச் செல்வி M. V. கௌசல்யா கருத்துக்கும் செவிக்கும் இனிய தமிழிசை விருந்தளித்தார். மாலை 5-மணிக்கு சொற்பொழிவு நிகழ்ச்சி துவங்கியது. பச்சையப்பன் கல்லூரித் துணைத் தமிழ்ப் பேராசிரியர் **அ. மு. பரமசிவானந்தம்** அவர்களைத் தலைமை தாங்குமாறு வ. கு. தலைவர் முன்மொழிய விழாப் பொதுச் செயலாளர் வழிமொழிய தலைவர் தம் தலைமையுரையைத் துவங்கினார். அவர் உரையில், "தமிழரும் குறள் நெறியும்" என்ற பொருளை குறித்து தெள்ளிய கருத்துக்களுடன் அழகுபட விரிவுரையாற்றினார்.

அடுத்து **திருக்குறளார். வி. முனுசாமி** அவர்கள் நகைச்சுவை ததும்ப நீண்ட அறிவுரையொன்று நிகழ்த்தினார். அவர் பேசுகையில் அரசியலுக்கு அடிப்படை எது என்பதை எடுத்துக் காட்டி, குறள் நெறியின் உண்மை, வள்ளுவரின் காலம், ஆகியவற்றைக் குறித்தும், கடவுளும் கள்ளும் எத்தன்மையுடையவை என்பதையும், வள்ளுவர் காட்டும் கடவுள் எது என்பதை தெளிவு படுத்தியும் மிகச் சிறந்த முறையில் மக்கள் உள்ளத்தில் ஆழப் பதியுமாறு சுமார் 1-30 மணி நேரம் பேசினார். பிறகு சென்னை நகராண்மைக் கழக உதவி ஆணையாளர் **என். சங்கரன்** அவர்கள் பேசுகையில் தானும் அறிஞர் அண்ணா அவர்களும் ஒரு ஒரு சாலை மாணவர்கள் என்று குறிப்பிட்டுவிட்டு, குறளின் சிறப்பை விளக்கிடும் குறள் நெறிக் கழகத்துக்குத் தன்னால் இயன்ற ஆதரவுகளை நல்கத் தயாரென்றும் மற்றவர்களும் ஆதரவு தர முன்வர வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

கவிஞர் சுரதா அவர்கள் தமது சொற்பொழிவில் திருக்குறள் உலகிலே ஒப்புயர்வற்ற நூல் என்பதை மிகச் சிறந்த உவமை நயங்களால் விளக்கினார்.

இறுதியாக தி.மு.க. பொதுச்செயலாளர் அண்ணாத்துரை அவர்கள் பெருத்த ஆரவாரத்துக்கிடையே எழுந்து தமது சொற்பொழிவைத் துவக்கினார்.

அண்ணா அவர்கள் பேசுகையில் குறள் நெறி மாநாடுகளைச் சிறப்புற நடத்தி விடுவது மட்டும் போதாது. குறள் நெறியைச் செயலிலே மேற்கொள்ள அனைவரும் முயலவேண்டும் என்றார். தமிழ் நாட்டுப் புலவர்கள் கூடி, குறள் நெறியைப் பரப்ப ஆவன செய்ய வேண்டிய அவசியத்தைக் குறிப்பிட்டார். அண்ணா அவர்கள் மேலும் பேசுகையில் இராசகோபாலாச்சாரியார் எழுதியுள்ள கட்டுரை யொன்றையும், வையாபுரி பிள்ளையின் கட்டுரை யொன்றையும் குறிப்பிட்டு அவற்றின் தவறான பிரசாரத்துக்கு தக்க மறுப்புக் கூறினார். குறள் நெறி முறைகளை தேடித் திரிவதை விளக்கி பெரிய மனிதர்கள் என்று கூறிக்கொள்வோர்களும் அமைச்சர்களும் குறள் நெறியை விடுத்து மதப்பிரசாரத்திலிறங்கியிருக்கும் போக்கை வன்மையாகக் கண்டித்தார்.

இரவு 10 மணிக்கு அண்ணாவின் "புலிநகம்" என்ற வரலாற்றுக் கதை ஓரங்க நாடகமும் கவிஞர் சுரதா எழுதிய "தமண காவியம்" என்ற கவிதை நாடகமும் நடைபெற்றது.

நான்காம் நாள் விழா

28—10—54 அன்று மாலை ஐந்து மணிக்கு நான்காம் நாள் விழா நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின. பச்சையப்பன் கல்லூரித் துணைத் தமிழ்ப் பேராசிரியர் புலவர் **அன்பு கணபதி** விழாவிற்குத் தலைமை ஏற்றார். அவர்தம் தலைமையுரையில், வள்ளுவர் புகழுக்குக் குழிபறித்த உரையாசிரியர்களின் வஞ்சகத் தன்மையை விளக்கியும், மறந்து போன பழந்தமிழரின் வீரம், காதல், கலை, வாணிபம், அரசியல், பொருளியல் பண்புகளை எடுத்துக்காட்டியும் சிறந்த ஆராய்ச்சியுரை வழங்கினார்.

'தம்பி' ஆசிரியர் **தில்லை-வில்லாளன்** அவர்கள் திருக்குறளின் மாண்பை பற்பல எடுத்துக்காட்டுகளுடன் குறிப்பிட்டு இன்றைய அரசியல் சமுதாய நிலையைப் பற்றி நகைச் சுவையுடன் பேசினார்.

அடுத்துப் பேசிய 'திராவிடன்' ஆசிரியர் என். வி. நடராசன் அவர்கள் மறைக்கப்பட்ட திருக்குறளை மக்கள் கையில் எடுத்துக் கொடுத்தவர்கள் பெரியார் இராமசாமியும் அண்ணாவும் தான் என்றும், தமிழ் மக்களுக்குத் திருக்குறள் ஒன்று தான் வழிகாட்டி என்று வலியுறுத்தியும், குறள் பற்றி ஆச்சாரியார் கூறிவரும் தத்துவார்த்தப் பித்தலாட்டப் பிரசாரங்களை விளக்கியும் நீண்டதொரு சொற்பொழிவாற்றினார்.

கடைசியாக மன்றம் ஆசிரியர் **நாவலர் இரா. நெடுஞ்செழியன்** அவர்கள் சிறந்த அறிவுக் கருத்துக்களை நகைச்சுவை ததும்ப, அழகிய எளிய முறையில் பேசினார். அவர் பேசும்பொழுது, தனது இலங்கைச் செலவைக்குறித்து சிறிது கூறினார். இலங்கையில் வைதிகக் கருத்துடையோர் கூட தன்னை

[12ம் பக்கம் பார்க்க]

திராவிடநாடு

காஞ்சி] 7—11—54 [ஞாயிறு

அந்த இடைவெளி!

✶

சமத்துவம் பேசிகளே, கபர்தார்! ஐந்துவிரல்களும் ஒரே மாதிரியாகவா இருக்கமுடியும்? எல்லோரும் எப்படி ஒரேவிதமாக இருப்பது?

உப்பு, மிளகாய், புளி—எல்லாம் கலந்தால்தான் குழம்பு. இதுபோலத்தான், சமூகத்திலும், அதது இருக்க வேண்டிய இடத்திலே இருக்க வேண்டும்.

அது அறியாமல், ஏதேதோ பேசினுல், என்ன பயன்.

சமுதாயத்தில் பலசாலியுமிருப்பான்—கிங்காங்போல! பலம் குறைந்தவனுமிருப்பான் — உன்னைப்போல! என்னைப்போல!! எல்லோரையும் ஒரே மாதிரியாக எப்படிச் செய்யமுடியும்?

*

இவ்விதம் பேசுகிறுர்களே சிலர், அவர்களுக்கு அறிவுரை தந்துள்ளார், அவர்.

மாடமாளிகை — மண்குடிசை, இரண்டுக்கும் இடையிலே பேதம் இருப்பது ஆபத்தாம்.

ஒருவன் மாடியிலும் இன்னொருவன் தெருக் கோடியிலுமாக இருக்கும் நிலையால், விபரீதம் விளையுமாம்—வேதனைகள் வளருமாம்.

எச்சரிக்கிறுர், அவர்!

இத்தனை நாளும் 'அவர்' எங்கே போயிருந்தார் எனக் கேட்காதீர்கள்-இப்போது, அறிவுரை தருகிறுர்! எச்சரிக்கிறுர்!!

இடைவெளி இருப்பது ஆபத்தாம்! ஏழை—பணக்காரன். மச்சுவீடு-குச்சி வீடு. இரண்டுக்குமிடையிலே இடைவெளி இருப்பது கூடாது! ஆகாது!! என்று எச்சரிக்கிறுர்.

"எச்சரித்துவிட்டு...! பிறகு என்ன செய்தார்?" என்று கேட்காதீர்கள். எச்சரித்தார்—அதுவும், இனிய சொற்பொழிவின்மூலம்: அவ்வளவுதான்! ஏறினுர், காரில்! போனுர், வீட்டுக்கு!! சமத்துவத்தை எல்லோர் வீட்டுச் சமையல் கட்டுக்கும் கொண்டுவர, அவர் என்ன உங்களைப்போல—நம்மைப்போல—சாமான்யரா! சகலகலா வல்லவர்-சதாசர்வகாலமும் ஆண்டவனுக்கும் அடியார்களுக்குமிடையில் தொடர்புப் பாலம் போட்டவண்ணம் இருப்பவர்!! அவருக்கு, இதுவா வேலை?

எச்சரித்துள்ளார்! இடைவெளி, கூடாது என்று!!

*

'எச்சரித்தால், எமக்கென்ன!'என்று எதற்கெடுத்தாலும், தலைப்பில் கொடுத்ததுபோல தாறுமாறு பேசுவோருண்டல்லவா? அவர்களுக்கு இன்னொருவர் சரியான சூடு தருகிறுர்!

சமத்துவம் என்றுல், எப்படிமலரும்—அது என்ன—ஐந்துவிரல்கள் சமமோ — அப்படி இப்படி என்று விதண்டாவாதம் செய்கின்றனரே—அவர்களுக்குத்தான் சூடு!!

"சமத்துவம் என்று சொல்வது எல்லோரும் ஒரேமாதிரியான உருவத்தோடு இருக்கவேண்டும் என்பதல்ல. ஒருவனைப்போலவே, இன்னொருவனுடைய உருவமும் உணர்ச்சியும் இருக்கவேண்டுமென எண்ணுவதும் சாத்யமல்ல. சமத்துவம் என்பதன் பொருள் ஒவ்வொரு மனிதனும் மற்றவனைப்போல வாழவேண்டும். ஒரு மனிதன் அனுபவிக்கும் எல்லா உரிமைகளும் வாழ்வும், எல்லோருக்கும் கிடைக்கும்படி செய்யவேண்டும்"

எச்சரித்தார் ஒருவர்!

இதோ, எதிர்ப்போருக்கு சரியான சூடு தருகிறுர், மற்றொருவர்!!

இடைவெளி, கூடாது—அவர்.

விளக்கம் தருகிறுர்—இவர்.

ஒருவர் பேசியது சென்னையில்!

இன்னொருவர், பேசியது கல்கத்தாவில்!!

எச்சரித்தது, அன்பர் ஆச்சாரியார்.

விளக்கம் தருவது, நேரு பண்டிதர்.

*

இடைவெளி, நிச்சயம் கூடாது! — எவரும் மறுக்கார், இதனை.

மனிதனுக்கும் மனிதனுக்குமிடையில் இந்த இடைவெளி நீடிப்பதால் சமூகமே, சதிக்கிடங்காகிக்கிடக்கிறது. கொலை! களவு! தீய எண்ணம்! — எல்லாம், மலிந்து கிடக்கிறது.

மாடி! தெருக்கோடி!!—இடைவெளி, அப்பப்ப, பலநாடுகளிலே புரட்சியைப் பூக்கச் செய்திருக்கிறது.

மனித உள்ளம் படைத்தோர் எவரும், இந்த இடைவெளியைச் சாடாமலில்லை—சாயுச்யபதவி தேடுவோரானுலும், சனுதனச்சீலர்களானுலும், சந்தர்ப்பம் நேரும்போது இந்த இடைவெளியைப் பற்றிப் பேசாமலிருப்பதில்லை.

சமூகத்தையே உருக்குலைக்கிறது, இந்தப் பேதம்.

மாடி! குடிசை!!—இரண்டுக்குமிடையிலே இருக்கும் இடைவெளி மட்டுமல்ல, கறுப்பன்! வெள்ளையன்!!-உயர்சாதியான்! தாழ்ந்தவன்!! இப்படியிருக்கும் இடைவெளிகளையும் சமப்படுத்தினுலே வாழ்வு மலரும் என்கிறுர், நேரு பண்டிதர்—விளக்கமாகக் கூறுகிறுர், சீனுவைக்கண்டுதிரும்பியதும் பேசிய பொதுக்கூட்டத்தில்.

ஆச்சாரியார், விளக்கமாகக் கூறவில்லை! ஏனெனில் அவர் பேசிய இடம், வடநாட்டு ஜைன வியாபாரிகள் மத்தியில். எனவே, சுருங்கச் சொல்லியிருக்கிறுர் — இந்த இடைவெளி கூடாது, என்று!

"இப்படி இடைவெளி நீடிப்பதால், ஆபத்து. உயர்ந்த இடத்திலிருப்பவர்கள் மேலே போய்க்கொண்டேயிருப்பதும், கீழே கிடப்பவர்கள் இன்னும் கீழே போய்க்கொண்டிருப்பதும் ஆபத்தைத் தரும். ஆகவே, அது ஏற்படாமல் பாதுகாத்துக் கொள்ளவேண்டும்"—என்கிறுர், ஆச்சாரியார்.

"சமத்துவம் என்றுல், சகலருக்கும் வாழ உரிமைகள் அளித்து, எல்லோரையும் வாழச் செய்வதுதான். ஒரே மனிதரைப் போல—உரு—உணர்ச்சி முதலியவைகள் எல்லோருக்கும் இருக்க வேண்டும் என்பதல்ல."—என்று விளக்குகிறுர், நேரு பண்டிதர்.

*

எச்சரிக்கை! சரியான பதில்!! இருவரும், ஏனுேதானுேக்கள் அல்ல-ஒருவர் மகுடதாரி! மற்றொருவர், மதகிரீடம் சூடி வருபவர்!!

இருவரும், சமத்துவம் மலர்வது குறித்து, எச்சரிக்கையும், எத்தர்களுக்குச் சரியான பதிலும் தருகிறுர்கள்.

இதே நேரத்தில், இதோ, ஒரு குரல்!

"ஆதித்திராவிடர்களுக்கு இன்னும் சில கோயில்களைத் திறந்துவிடவேண்டும் என்று சொல்லப்படுகிறது. இன்னும் நான் இதைப்பற்றி சிந்திக்கவில்லை. ஆனுல், ஒன்று சொல்வேன்! இப்படிச் செய்வதால் என்ன வந்து

விடப் போகிறது? பலபேருடைய மனதைப் புண்படுத்துவதுதான், மிச்சமாகும்.''

புண்படுத்தும் செயலாம்! வீண் வேலையாம்!! கூறுகிறது, இக்குரல்.

ஆச்சரியப்படுவீர்கள் — நமது அரசுத் தலைவர்கள் ஆங்காங்கும் வெற்றி முழக்கம் செய்யும் இந்தப் பிரச்னையில் இன்னும் எதிர்ப்பு இருக்கிறதா—என்று! இருக்கிறது, தோழர்களே, **இருக்கிறது!!** அதன் வாடைதான் இது.

அண்மையில் மைசூரில் நடைபெற்ற தாழ்த்தப்பட்டோர் மாநாட்டில் பேசிய டில்லி மந்திரி ஜகஜீவன்ராம், இந்தக் கொடுமையைக் களைந்தெறிய வேண்டும்—இதற்கு, சர்க்கார் தக்க நடவடிக்கை எடுக்கப் போகிறது என்று பேசினாராம்.

இந்தப் பேச்சைக் கொண்டுபோய்க் கொடுத்தனராம், நிருபர்கள்! அப்போது, அக்குரல் ஒலித்திருக்கிறது!! ஏன், இது?—வீண் வேலை!—மனது புண்படும் காரியம்!—எதற்காகவாம்?—என்ற, கேள்விகளோடு.

இந்தக் குரலும், சாமான்யமான தென்று எண்ணாதீர்கள்!

டில்லி மகிபர் ராசேந்திரர் கண்டு போற்றிய பீடத்திலிருந்து கிளம்பும் குரல்.

சுப்ரீம் கோர்ட் நீதிபதிகளும், அரசாங்க மந்திரிகளும் 'ஐயனே! மெய்யனே!' என்று போற்றும், குரல்.

அடியார்கள்! திருவடி தொழுவோர்! பக்தர் கூட்டம்!—இந்தப் பாதகண்ட முழுமையும். உண்டாம், அந்தக் குரலுக்கு. அது, கூவுகிறது இவ்விதம்!

ஆலயங்களை ஆதித்திராவிடர்களுக்கென் திறந்துவிட வேண்டுமாம்! 1954-ல் இப்படி! அதை, அபிரிக்கமலானின் நிற வெறியைக் கண்டித்து எழுதும் 'இந்து' ஏடு, எடுத்துப் பிரசுரிக்கிறது!! நுழைய அனுமதிப்பதால், மனம் புண்படுமாம்—மார்க்க தாதா, கூறுகிறார்.

இந்தக் குரலுடையார், வேறு யாரு மல்ல; அண்மையில் ஆற்றில் வீழ்ந்து இறந்துபோன மடாதிபதிக்குப் பதில் பீடமேறியிருக்கும், சிருங்கேரி மடத்து 'சீமான்' தான், செப்புகிறார் இவ்விதம்!!

தீண்டாமை!—வெறுக்காதவர் யாரும் கிடையாது. சாதாரண ஆளிலிருந்து, உயரப்பர்கள் வரையில் எல்லோரும், ஒப்புவர்— கொடுமை! கொடுமை!! என்று. இவர், கூறுகிறார், ஏன் இது, என்று! அதுவும் இப்போது!!

சிருங்கேரியார், கேட்கிறார்-வடநாட்டிலே பல இடங்களிலே இதற்காகக் கத்தியும் கம்பும் தூக்கப்பட்டு, அடிக்கடி கலவரம் விளைகிறது—ஏடுகள், தருகின்றன அந்த விபரங்களை!

இந்த இடை வெளியை யார் சரி செய்வது?

என்ன சொல்வார், அன்பர் ஆச்சாரியார்!

எச்சரிக்கை விடுத்தார்—போதுமா? எச்சரிக்கைக்குப் பின்...!

சிருங்கேரி மடாதிபதி மட்டுமல்ல, அவரைப் போன்றோர் ஏராளம் உண்டு, இடைவெளியால் வாழ்வோர்! இடைவெளி நீடிப்பதால் இன்பம் அனுபவிப்போர்!! அவர்களின் பிடியிலிருந்து மக்களை மீட்டு ஆனந்தம் அரும்பச் செய்ய, சமத்துவம்பற்றி சங்க நாதம் செய்தாரே நேரு பண்டிதர், அவரால் என்ன செய்யமுடியும்? இதுவரை, என்ன செய்திருக்கிறார்!

எல்லோருக்கும் வாழ உரிமை வேண்டும்!— இனிக்கும், கருத்து. களிக்கும் விதத்தில் பேசுகிறார், நேரு. கசக்குமென்போருக்குச் சரியான கசையடி தருகிறார்.

போதுமா, அது? அதற்குப்பின்...! கடமை ஆற்றுவது, யார்?

இடைவெளி ஆபத்து!—என்கிறார், ஆச்சாரியார், உண்மை, ஒவ்வொருவரும் உணரவேண்டிய உண்மை.

பேசிவிட்டால் போதுமா? அந்த இடைவெளியைக் குறைக்க என்ன செய்யப் போகிறார், இவர்!

ஆண்டான்—அடிமை.

பணதிபதி—ஏழை.

உயர் ஜாதியான்—தாழ்ந்த ஜாதி.

சமுதாயத்தில் எத்தனை, இடை வெளிகள்! இந்த இடைவெளிகளால் இதுவரை ஏற்பட்டிருக்கும் சங்கடங்கள்தான் எத்தனை எத்தனை! வாழ முடிந்ததா, பலரால்—வாழும் உரிமைகளை அனுபவிக்க முடிந்ததா! சாவே, வா—என்று சாக்கடையும், பசிப்பிணியுமே சொந்தச் சொத்தெனத் தவித்தனரே, மாள்கின்றனர். இவர்களது, துயரைத் துடைப்பது, யார்!

எச்சரிக்கிறார், ஆச்சாரியார்.

விளக்கம் தருகிறார், பண்டிதநேரு!

ஆனால், கண்ணாரக் காணும் காட்சிகள், என்ன! மாடிவீடுகள் உயர்ந்த வண்ணமே உள்ளன. ஆலையரசர்களும், பாங்கி அதிபர்களும் ஒய்யாரமாக வாழ்கின்றனர். ஏழைகள், மடிகின்றனர். உரிமைகள் இல்லாதவர்களாக ஒடுங்குகிறார்கள்.

இதனைச் சமப்படுத்துவது, யார்?

ஆச்சாரியார், அதற்கு வழி கூற விரும்பவில்லை. அந்தப் பக்கமே திரும்ப விரும்பவில்லை.

அன்பர் பண்டிதரோ, சூடு தருகிறார்—அதே நேரத்தில்; 'பழைய மாட்டிலே'யே சவாரி செய்கிறார்.

மக்கள் மன்றத்தில் கிடக்கும் 'இடைவெளி'களைச் சமப்படுத்துமுன், இந்தத் தலைவர்களின் உள்ளத்துக்கும் உதட்டுக்கும் இடையிலே தென்படும் 'இடைவெளி'யைக் குறைக்க வேண்டும். இது, உங்களாலும் முடியாது. நம்மாலும் ஆகாது — யாராலும் இயலாது.

ஏனெனில், இருவரும், ஏதோ பேசுகின்றனர்—பிறர், திருப்திக்கு! பிறகு ......!! நேருவுக்கு, டில்லி! ஆச்சாரியாருக்கு, தியாகராயநகர்!! பூமாலை! பாராட்டு!! கார், பறக்கிறது!! 'ஜே' முழக்கம் அதிர்கிறது!!!

அவர்கள் வேலை, அவ்வளவுதான்.

'இடைவெளி'யைச் சமப்படுத்த, எண்ணற்றோர், தேவை — நம்மைப் போல.

நாம்தான், சாதிக்கவும் முடியும்! ஏனெனில், இடை வெளிகளைப்பற்றி இவ்வளவு காரசாரமாகப் பேசிய இருவரும், சிருங்கேரி குரலுக்குத் தெண்டனிடுபவர்கள்!! அது தர்ணை, சீர் கெடுக்கிறது—நாட்டை. தெரியாத விஷயமல்லவே, உங்களுக்கு!

✶

தி. மு. க. செயலாளர்கட்கு வேண்டுகோள்

—★—

1955-ம் ஆண்டு திராவிடர் நாட் குறிப்பு (டயரி) விரைந்து அச்சாகிக் கொண்டிருக்கிறது. மாவட்ட தி. மு. க., மற்றைய தி. மு. க. கிளைகள் இவற்றின் செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர் பெயர்களை 12—11—54-க்குள் கீழ்க் கண்ட முகவரிக்கு அனுப்பிவைக்கு மாறுவேண்டுகிறோம். அதன்பின் கிடைப்பவை டயரியில் இடம் பெற முடியாமல் போகுமாதலால் விரைவில் அனுப்பிவைக்கவும்.

போர்வாள் அலுவலகம்
பவழக்காரத் தெரு,
சென்னை.

சிந்தனைச் செல்வம்

[செழியன்]

இரா. செழியன்-நாடறிந்த நாவலர் நெடுஞ்செழியன் அவர்களின் இளவல்—ஏடுகளில் தமது நேரத்தைச் செலவிடும், முற்போக்காளர்.

தெளிவான கருத்து—அதனைச் சுவைபட எடுத்துக் கூறும் ஆற்றல் படைத்தவர்.

கட்டுரை, இதைக் காட்டும்.

இதனைக் கூறுவதற்குக் காரணம் செழியன் வீட்டோடு இருக்கும் புயல்! எனவே நாட்டவர் அறிந்திருக்கக் காரணமில்லை என்பது தான்.

"வாழ்வாவது மாயம்; மண்ணாவதும் மெய்யே". இது வேதாந்தத்தின் சாரம். உலகில் தோன்றிய பல்வேறு மதங்களின் அடிப்படைச் சித்தாந்தமும் இதுதான். மதக்கோட்பாடுகளில் மறுவுலகைப்பற்றிய கவலையும் ஆராய்ச்சியும்தான் அதிகமிருந்தன. மறுவுலகுக்குச் செல்கிறவன் தங்கவேண்டிய இடமாக மண்ணுலகு கருதப்பட்டது. அந்த மறுவுலகு அருகில் இருக்கிறதா? இல்லை. இந்த மண்ணில் பிறந்தவன், தன் சாவுக்குப் பின்தான் அந்த உலகில் அடியெடுத்து வைக்கிறான். பயணத்தில் ஒரு பகுதி மனித வாழ்வு. பயணத்தின் முடிவும், பலனும் மரணத்துக்குப் பின் தான் கிடைக்கின்றன. இவ்வாறு கல்லறைக்கு அழைத்துச் செல்லப்படும் வழியாக வாழ்வு கருதப்பட்டதே தவிர, வாழ்க்கையில் உள்ள வசதிகளை நாம் அனுபவிக்கலாம் என்ற எண்ணம் உண்டாக்கப்படவில்லை.

மாறாக மற்றொரு வாழ்வைப்பற்றி விவரித்துக் கூற வந்த மதவாதிகளும், வேதாந்திகளும், இந்த வாழ்வையும் அதனோடு தொடர்புடைய எல்லாவற்றையும் வெறுத்தே கூறினர். கவிஞர் பாரதிதாசன் தெளிவாகக் குறிப்பிட்டதைப் போல

"தேகம் அழிந்துவிடும்;
சுற்றந்தார் செத்திடுவார்;
போகங்கள் வேண்டாம்;
பொருள் வேண்டாம் மற்றவிந்
பாழுலகம் பொய்யே;
பரமபதம் போ."

என்ற சாக்குருவி வேதாந்தம்தான் மதவாதிகளால் பேசப்பட்டது. மண்ணையும், வாழ்வையும் வெறுத்துப்பேசும் இத்தகைய சுடுகாட்டு வேதாந்தம் இந்தியாவுக்கு மட்டும் உரித்தானதல்ல; உலகில் மதவாதிகளின் ஆதிக்கம் உயர்ந்திருந்த ஒவ்வொரு நாட்டிலும் அத்தகைய வேதாந்தங்கள்—இன்னும் கடுமையான போக்கில் கூட ஆட்சி செலுத்தின. ஆனால் அங்கெல்லாம் அவை மறந்துவிட்டன. இந்தியாவில் மட்டும்தான் அது இன்றளவும் தொடர்ந்து வந்திருக்கிறது.

அரசியல் விடுதலை கிடைத்த பின் மத நம்பிக்கையும், மக்கள் வாழ்வில் அவைகளுக்கிருந்த பிடியும் பலப்படுத்தப்பட்டிருக்கின்றன. விடுதலை ஆரம்பிக்கப்பட்டதே நள்ளிரவில், நாள் நட்சத்திரம் பார்க்கப்பட்டு, பூரண, கும்பத்துடன், மந்திர கோஷங்களுக்கிடையில். ஆண்டு தோறும் கொண்டாடப்படும் விடுதலை நாளும், ராம நவமி, கிருஷ்ண ஜயந்தி போன்று கருத்தைத் தெரிவிக்காத, மத சம்பந்தமான காரியத்தைப் போலவே ஆகிவிட்டது. இது மக்களின் குற்றமல்ல, ஆட்சிப் பீடத்திலுள்ளவர்களே அந்தப் போக்கை ஆதரிக்கின்றனர். பெருமைப் படுத்திப் பேசுகின்றனர், தேசியத்தின் பெயரால் இந்தியவேதத்தின் உயர்வு, உபநிஷத்துக்களின் மகிமை, சமஸ்கிருதத்தின் 'சாகாத்' தன்மை, இந்து மத கலாச்சாரம் இவைகள் பேசப்படுகின்றன. பஜனை மடத்தில் நடைபெற வேண்டிய பேச்சு—இந்தியப் பாராளு மன்றத்தில் நடைபெறுகிறது.

அயல் நாட்டுக்குச் சென்றுள்ள அரசியல் தூதுவர்களோ, இந்து மதத் தூதுவர்களாகவே தங்களை எண்ணிக் கொள்ளுகின்றனர். நம் நாட்டின பொருளாதாரத்தையும், அரசியல் நிலையைப் பற்றியும் அவர்களுக்குக் கவலையில்லாவிட்டாலும், வேதம் பிறந்த தங்கள் நாட்டைப் பற்றியும், கீதை வளர்த்த தத்துவத்தைப் பற்றியும் அவர்கள் விளக்கத் தவறுவதில்லை. இந்தியாவின் வேதாந்த மனப்போக்கு—அதுதான் விஞ்ஞானத்தால் அழிந்துபடும் உலகுக்கு வழி காட்டும் என்று கூறுகின்றனர். தம்முடைய விருந்துப் பேச்சுகளில், சற்று ஆணவத்துடன், கேட்போர் ஆச்சரியப்படும் விதத்தில்.

கீழ் நாட்டின் வேதாந்தம்—மேல் நாட்டின் விஞ்ஞானம், கிழக்கு—மேற்கு இவற்றின் உயர்வு தாழ்வுகள் பேசப்படுகின்றன.

விஞ்ஞானத்தின் முக்கியத்தைப் பற்றித் தாழ்த்திப் பேசுகிறார்களே, விஞ்ஞானத்தின் பலன்கள் இந்தியாவுக்குக் காட்டப்படவில்லையா? விஞ்ஞானத்தின் அவசியம் அவர்களுக்குத் தெரியாதா? என்று கேட்கலாம். விஞ்ஞானத்தின் பலன்கள்-பெரும் அளவில் அனைத்தும் வரவில்லையென்றாலும், அவற்றில் முக்கியமானவைகள் நாட்டில் எங்கும் பரவியிருக்கின்றன. வானிடை வட்டமிடும் விமானம், விரைந்தோடும் மின்சார வண்டி, ஆர்த்திடும் இயந்திரசாலை, துணி மணிகளை அள்ளி வீசும் ஆலைக்கூடம், இரவைப் பகலாக்கும் விளக்குகள், தேனினுமினிய தீங்குழலைப் பாடிடும் சிறு பெட்டி, வெள்ளைத் திரையில் வானவில்லைத் தோற்கடிக்கும் வர்ணங்களை வீசிடும் வேடிக்கை இவையனைத்தும் நம் நாட்டுக்கு வந்துள்ளன.

நாட்டில் எப்பக்கம் திரும்பினாலும் விஞ்ஞான ஆராய்ச்சியின் பலனாக ஏற்பட்ட நூதனக் கருவிகளும், விநோதப் பொறிகளும், கண்ணையும், கருத்தையும் மலைக்கச் செய்யும் வேலைப்பாடுகளும் காணப்படுகின்றன.

விஞ்ஞானப் புதுமைகளைக் கண்டிருந்தும், அதன் பயனை உணர்ந்திருந்துங்கூட, இந்தியாவில் விஞ்ஞானத்துக்கு மதிப்பு ஏற்படவில்லை. இந்திய வேதாந்தத்தின் முன்னேற்றத்திற்கு விஞ்ஞானம் தாழ்ந்ததாகவே—இன்னும் சொல்லப் போனால் இழிந்ததாகவே கருதப்படுகிறது. காரணம் என்ன?

மேட்டூர் தேக்கத்தில் மின்சாரம் தயாரிக்கப்படுகிறது. அது ஐந்நூறு, அறுநூறு மைல்களை வினாடிக்குள் கடந்து, சென்னையில் ரூனே மேட்டில் உள்ள கடையில் ஒரு மின்

சார விளக்கைப் பிரகாசிக்கச் செய்கிறது.

எண்ணெயும், புகைச்சலும் எவ்வித தொந்தரவுமின்றி மின்சார விளக்கு எரிவதைப் பற்றிக் கடைக்காரன் களிப்படைவதில்லை. பொழுது போனதும் மின்சார விளக்கைப்போடுவதற்கு முன், பிள்ளையார் படத்துக்கு முன் இருக்கும் சிறு அகல் விளக்கைப் போடவே அவன் தயாராக இருக்கிறான். அவன் கண்முன் ஆயிரம் மின்சார விளக்குகள் காற்றையும், மழையையும் லட்சியம் செய்யாமல் பிரகாசித்த போதிலும், அந்தச் சிறு விளக்கின் மீது தான் அவன் கண்ணும் கருத்துமாயிருக்கிறான்.

இந்தியாவின் போக்கும் அந்தக் கடைக்காரனின் நிலைமையைப் போன்றதுதான். விஞ்ஞான ஆராய்ச்சிகள் எவ்வளவுதான் உயர்ந்து அறிவுச் சுடரைப் பிரகாசித்த போதிலும், பகுத்தறிவின் சிறு அசைவுக்குக்கூட நிற்கமுடியாத இந்தியமதவேதாந்தமெனும் அகல் விளக்கு மிகுந்த கவலையுடன் பாதுகாக்கப்படுகிறது.

காரணம், விஞ்ஞானப் புதுமைகள் நம் நாட்டுக்கு வந்தன. ஆனால் விஞ்ஞான மனப்பான்மை இன்னும் வரவில்லை.

மின்சார விளக்கு விஞ்ஞான ஆராய்ச்சியால் வந்தது. அகல் விளக்கு மதம் உண்டாக்கிய பழக்கம். வெளியுலகில் மின்சார விளக்கு எரிந்த போதிலும், உள்ளத்தில் அகல் விளக்குத்தான் மதிப்பைப் பெறுகிறது.

மின்சார சக்தியைவிட விதியின் சக்திக்குத்தான் நம் நாட்டில் அதிக பலமிருக்கிறது.

இரண்டு மாறுபட்ட சக்திகளுக்கு ஏற்பட்ட போராட்டம். வாழ்வை வெறுக்கும் வேதாந்த தத்துவம்—வாழ்வை வளம்படுத்தும் ஆராய்ச்சிக்கும், மதப் பழக்கத்துக்கும்—விஞ்ஞான முறைக்கும், எடுத்ததைக் கட்டாயப்படுத்தும் எதேச்சாதிகாரத்துக்கும்—கொடுத்ததை அப்படியே ஏற்றுக் கொள்ளாமல் ஆராய்ந்தறியும் பண்புக்கும், பழமை அடிமைக்கும்—புது வாழ்வுக்கும் மூண்ட போராட்டம். முடிவில் மதப்பிடிப்பு குலைந்தது; விஞ்ஞானம் வெற்றி பெற்றது; பழைமை மங்கியது, புது வாழ்வு ஆரம்பமாயிற்று.

இந்தியாவில் அந்தப் போராட்டமே ஆரம்பிக்கப்படவில்லை.

வாழ்க்கை முறையில் மாறுதல்களை உண்டாக்க முயற்சிக்குமுன், தேங்கிக் கிடக்கும் மனப்பான்மையில் ஓரளவுக்காவது அசைவையும் தன் நிலைமையைப் பற்றிய உணர்வையும் உண்டாக்கவேண்டும். மனதில் உண்டாகிற கருத்துப் புரட்சியைப்பற்றிய அவசியம் நம் நாட்டு அரசியல் வாதிகளால் கவனிக்கப்படவில்லை; இன்றுவரை அலட்சியப்படுத்தப்பட்டே வந்திருக்கிறது. சமூகம் பொருளாதாரம், அரசியல், எந்தெந்தத் துறையாயிருந்தாலும் சரி, அவற்றில் பெரும் மாறுதல்களைச் செய்வதற்கு மக்கள் மனப் போக்கில் மாறுதல் ஏற்படவேண்டும். சிந்தனை தான் செயலுக்குத் தூண்டுகோலாகும்.

ஏழ்மை, அறியாமை இந்தச் சுற்று வளையத்தில் நாடு உழல்கிறது. ஏழ்மையில் அறியாமை வளர்கிறது; அறியாமை ஏழ்மையை வளர்க்கிறது. வாழ்வில் படும் துன்பத்தை ஒவ்வொருவரும் உணர்கின்றனர். ஆனால், அந்தத் துன்பங்களைக் களையும் வழி அவர்களுக்குத் தெரியவில்லை. "அன்றெழுதியவன் அப்படி எழுதிவிட்டான், நாமென்ன செய்யமுடியும்" என்று மனம் சோர்ந்து விடுகின்றனர். கொடுமைகளைக் கண்டபொழுது மனதில் கொந்தளிப்புத் தோன்றிய போதிலும், விதியின் செயல் என்ற பெரும் பாரம் அவர்களைச் செயலற்றவர்களாக்கிவிடுகிறது. சமதர்மத்தின் மேன்மைகளை அவன் உணர்ந்தபோதிலும், எமதர்மனின் தண்டனைகளில் அவனுக்கு நம்பிக்கையும் பயமும் இருக்கிறது. எனவே எப்படியாவது இந்த வாழ்வில் ஏழ்மையைப் பொறுத்துக்கொண்டால், மறுவாழ்வில் எப்படியாவது பகவான் நாம் காட்டிய பொறுமைக்குப் பரிசளிப்பார் என்று கருதுகிறான். இந்த அடிப்படைப் பக்தி மறைய வேண்டும். ஏழ்மையும், பல கொடுமைகளும் நிறைந்த இந்த அவல வாழ்வை மாற்றி, இந்த மண்ணிலேயே புது வாழ்வை அமைக்க முடியும் என்ற நம்பிக்கை உண்டாக வேண்டும்.

வாழ்வில் காணப்படுகிற இல்லாமை, போதாமை எனும் பெருங்குறைகள் தவிர்க்கப்பட்டால் தான் வாழ்வு திருந்தும். அதற்கு வாழ்க்கை வசதிகளும், நாட்டின் வளமும் பெருக்கப்படவேண்டும். இயற்கை வளம் நாடெங்கும் சூழ்ந்திருக்கிறது, மழையைத் தாங்கி தென்றலை வீசிடும் மலைத் தொடர்கள், அகிலும் தேக்கும் அசைந்தாடும் காடுகள், பொன் கொழிக்கும் ஆறுகள், புனல் பரந்த வயல்கள், செந்நெற் களஞ்சியங்கள், செழுங் கரும்புத் தோட்டங்கள் தீஞ்சுவைக் கனிகள், தேன்மலர்ச் செடிகள்—இயற்கை வளம் செழித்திருக்கும் நாடு. ஆனால், வாழ்வில் இன்பம் இல்லை. வளம் இல்லை.

இயற்கையின் வளங்கள் சிதறிக் கிடக்கின்றன. அவற்றைச் சேகரித்தால் அவல வாழ்க்கை வளமாக மாறுகின்றது. இயற்கை வளங்களுடன் மக்களின் மன வளமும் சேர்ந்தால்தான் நாடு வாழ்வடைகிறது.

இயற்கை வளம் வானில் உலவிடும் மேகத்தைப்போல. மேகத்தில் மழை இருக்கிறது. ஆனால், தடுப்பவை இல்லாவிட்டால், காற்றுவாக்கில் திரிந்து அது கலைந்துவிடும். மலைத்தொடரால் தாக்கப்படும்பொழுதுதானே மழை வருகிறது. அதைப்போல இயற்கை வளம் சிந்தனை என்னும் குன்றால் தடுக்கப்படும்பொழுது தான் வாழ்க்கை வளம் உண்டாகிறது.

சிந்தனைச் செல்வம்! அதுதான் வாழ்க்கைச் செல்வங்களில் மிக முக்கியமானது, சமுதாய வளர்ச்சியைக் குறிக்கும் அளவுகோல், வாழ்வைச் செம்மைப்படுத்தும் கருவி, புதுவாழ்வின் அடிப்படை.

சிந்தனை, நம் நாட்டில்—தமிழகத்தில் தேங்கியிருக்கிறது. செத்த பழக்கங்களும், தள்ளப்பட்ட கருத்துக்களும் அங்கு அகற்றப்படவில்லை. புதுமைக் கருத்துக்களுக்கு இடந்தரப்படவில்லை.

செந்தாமரை விரித்த குளம். அதில் பாசி படர்ந்திருக்கிறது.

பொன் கலம். அதன்மீது தூசி அடர்ந்திருக்கிறது. அதற்கும் மண் கலத்துக்கும் வேறுபாடு தெரியவில்லை.

தமிழ் நாட்டில் சிந்தனையின்மீது பழைமையெனும் பாசி படர்ந்திருக்கிறது. காலப் புழுதி வீசிய தூசி படிந்திருக்கிறது. பாசி அகற்றப்பட்டால்தான், தூசி துடைக்கப்பட்டால்தான், சிந்தனை தெளிவடையும், ஒளிவிடமுடியும், பயனுள்ளதாகும்.

இந்தியாவில் மற்றெல்லாப் பகுதிகளையும்விட தமிழகத்தில்மட்டுந்தான், சிந்தனை, பழைமைப் பிடிகளிலிருந்து சிறிதளவு விலகியிருக்

கிறது, அதற்குக் காரணம், சுயமரியாதை இயக்கத்தின் ஒப்பற்ற வேலையாகும். பெரும்பாலோர் கூடாது என்று எதிர்த்தபோதும், பெரியோர்கள் அடாது என்று பழித்தபோதும், "இது மிகப் பளுவான வேலை; இந்த உளைச்சேற்றை ஏறாத ஆழத்தை எந்தவிதம் நீக்குவது? முடியாத நேரம்" என்று முற்போக்கு எண்ணமுடையவர்களே தடுத்தபோதும், சுயமரியாதை இயக்கத்தினர் தன்னந் தனியாக அடிமை விலங்குகளிலிருந்து சிந்தனையை விடுவிக்கும் வேலையை— மிகக் கஷ்டமான மெதுவான வேலைதான்—மேற்கொண்டனர். உளுத்த வாழ்விலிருந்து மனிதனைப் புது வாழ்வுக்கு அழைத்துச் செல்லும் பணியை மேற்கொண்டனர். அந்த முயற்சி முற்றுப் பெறவில்லை. ஆனால் ஓரளவுக்கு வெற்றியளித்துள்ளது. இலக்கியத்திலும் எழுத்திலும், கவிதையிலும், பேச்சிலும், மக்களின் மனதிலும், அவர்தம் அன்றாட வாழ்க்கை நினைவிலும் எதிரிகளும் மறுக்கமுடியாத மறுமலர்ச்சியைச் சுயமரியாதை இயக்கம் ஆரம்பித்து வைத்துவிட்டது. அந்த வேலை தொடர்ந்து நடைபெறுகிறது, வெற்றியடைந்தால் புதுவாழ்வு மலரும் என்ற எண்ணத்தில்—நம்பிக்கையோடு.

[புது வாழ்வு]

★

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

வரவேற்று சிறப்பித்தமைக்கு குறள்தான் காரணமென்றும், இலங்கையில் குறள் நெறிக்கும் பகுத்தறிவுக் கொள்கைக்கும் செல்வாக்கு பெருகிவருகிறது என்றும் கூறினார். திருக்குறளுக்கும் ஏனைய மதநூல்களுக்கும் உள்ள வேறுபாடுகளை விளக்கினார். மத நூல்கள் கூறுவதை அப்படியே நம்பவேண்டும் என்ற கட்டாயம் குறளுக்குக் கிடையாது என்பதை வள்ளுவரின் குறளே கூறுகிறது. ஏனைய சமய புராண வேதங்கள் ஆண்டவனாலேயே எழுதப்பட்டதாகக் கூறப்படுகிறது, ஆனால் மனிதர்களால் உணரப்படும் விஞ்ஞான உண்மைகள் கடவுள் எழுதிய வேதங்களில் காணப்படவில்லை. அதுவன்றி முற்காலத்திலும் ஒத்த உண்மைகள் அவ்வேத புராணங்களில் மறைத்துத் திரித்து வேறுபடுத்திக் கூறப்படுகின்றன என்று விளக்கமாக ஒரு மணிநேரம் பேசினார்.

ஐந்தாம் நாள் விழா

29—10—54 அன்று மாலை 6-மணிக்கு ஐந்தாம் நாள் விழாத் துவங்கியது. இந்திய செஞ்சிலுவைச் சங்க கௌரவ அமைச்சரும் ஓய்வு பெற்ற ஸ்தல ஸ்தாபன துணை மேலாளருமான **சோ. அமிர்தகணேசனார்** அவர்கள் தலைமை தாங்கினார்கள்.

தலைவர் தம் முன்னுரையில், திருக்குறளின் சிறப்பினைப் பற்பல எடுத்துக்காட்டுகளுடன் விளக்கி தமிழ் பிறமொழி ஆதிக்கத்தால் அழிக்கப்பட்டு வரும் நிலையை எடுத்துரைத்தார். மேலும் தமிழ்ப் பண்பாடுகளை நினைவுபடுத்தி தாழ்ந்த தமிழின் தலைநிமிர ஆவன செய்யவேண்டும், வடமொழி, ஆதிக்கத்திற்கு இடமளிக்கக் கூடாது என்பதை வலியுறுத்தினார். பிறமொழி கலப்பின்றி தூய தனித் தமிழில் அனைவரும் பேசினால்தான் தமிழ் உயரமுடியும் என்றும், தமிழன் யார்க்கும் தலை வணங்காதவன் என்றும் கூறினார்.

அடுத்து சென்னைப் பல்கலைக் கழக வரலாற்றுத்துறைப் பேராசிரியர் **ஆரோக்கியசாமி** பேசுகையில் திருக்குறளின் முதல் மூன்று அதிகாரங்களை திருவள்ளுவர்தான் எழுதினாரோ, அல்லவோ, அந்த அதிகாரங்களில் கடவுளைப்பற்றி கூறும் கருத்துக்கள் எந்த ஒரு குறிப்பிட்ட மதத்தையும் சார்புபடுத்தி எழுதப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஒவ்வொரு சமயத்தாருக்கும் ஒவ்வொரு வேத நூல் தனியே இருந்த போதிலும், திருக்குறளை எல்லா மதத்தினரும் ஏற்றுக்கொள்ளும் வகையில் எழுதப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டார். அடுத்து சென்னை ஆசிரியப் பயிற்சிக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர், **ச. ஆறுமுக முதலியார்** அவர்கள் உயர்தனிச் செம்மொழியாகிய தமிழ் மொழியின் சிறப்பினை உணர்த்தி, தமிழுக்கும் பெருமையளிக்கும் திருக்குறளை உலகுக்கு அளித்த வள்ளுவர் பெருந்தகையின் தனிப் பெருஞ் சிறப்பினை விளக்கி தமிழர்களின் கடமைகளை வலியுறுத்திப் பேசினார்.

பிறகு சென்னை அரசினர் கலைக் கல்லூரித் துணைத் தமிழ்ப் பேராசிரியர் **பி. ஆர். மீனாட்சிசுந்தரனார்** அவர்கள் பேசினார்கள். அவர் பேசுகையில் திருக்குறளுக்கு எதிராக சில கையாளும், துரோகச் செயல்களைப் பல ஆதாரங்களுடன் எடுத்துரைத்தார். தமிழுக்கும் தமிழ் மறைக்கும் கேடுவிளைவிப்பதற்கென்றே ஒருகூட்டத்தினர் கட்டுப்பாடாகத் திட்டமிட்டு வேலை செய்து வருகின்றனர். அவர்களுடன் சில தமிழர்களும் சேர்ந்துகொண்டு தமிழுக்குத் துரோகம் செய்வது வருந்தத்தக்கது. குலத்துக்கொருநீதி, கூறும் மனுநீதி நூலைத் தழுவிதான் குறள் எழுதப்பட்டது என்று கூறும் கூற்று நம்ப முடியாத கண்டனத்துக்குரிய கூற்றாகும் என்று கூறி அரும் பெருங்கருத்துக்களைச் சுவைபட விரித்துரைத்துத் தம் பேச்சை முடித்தார்.

பிறகு பேசிய **புலவர் நன்னன்** அவர்கள், குறள் நெறியையே தமிழர் தம் செந்நெறியாகக் கருதியொழுகுவது தமிழ் மக்கள் கடமை என்றும், குறள் நெறியையே தமிழரின் மதமாகக் கொண்டால்கூடத் தவறில்லை என்றும், திருக் குறள் மக்களுக்கு வழிகாட்டி, அகத்தின் விணக்கு அறிவின் சிகரம் என்று கூறி வள்ளுவரின் அரிய கருத்துரைகளை எளியமுறையில் விளக்கிப் பேசினார். தலைவர் முடிவுரைக்குப் பின்னர் டி. எஸ். திருவேங்கடம் நன்றி கூறலுடன் விழா முடிவுற்றது. அடுத்து **மா. செங்குட்டுவன்** எழுதிய 'குறள் தொண்டன் என்னும் ஓரங்க நாடகம் நடைபெற்றது.

ஆறும் நாள் விழா

30—10—54 அன்றைய விழா, ஒரு கலை விழாவாகவே நடைபெற்றது. இரவு 8 மணிக்கு குமாரி சி, எம். சரோஜா உயர்ந்த முறையில் பலவித நடனங்கள் ஆடி சிறப்பித்தார்கள். **கேசவன்** எனபவர், நடிகவேள் எம். ஆர். இராதா 'இரத்தக் கண்ணீர்' நாடகத்தில் நடிப்பதைப் போன்று சிறிதும் மாறுபடாமல் நடித்துக் காட்டியது வியப்புக்குரிய நிகழ்ச்சியாக இருந்தது. பிறகு **கனல் பா. கோ. ரா.** எழுதிய 'குறளோவியம்' என்ற நாடகத்தை, நுங்கம்பாக்கம் மக்கள் மகிழ்ச்சி மன்றத்தார் நடித்தனர். கடைசியாக **கோவிந்தன்** அவர்கள் மயில் நடன நிகழ்ச்சியும் நடந்தது. இறுதி நாளாகிய அன்று ஏராளமான மக்கள் கலந்துகொண்டு தங்களது உற்சாகத்தையும், ஆர்வத்தையும் காட்டிக் கொண்டனர்.

★

26. பிணம் பேசிற்று

சாட்சிக் கூண்டேறிய நல்லமுத்து ஒருவேளை இந்த நேரத்தில் தன்னைக் காட்டிக்கொடுத்துவிடுவானே என்று பயந்தான், ஆறுமுகம். இத்தனை பெரிய மனிதர்கள் தன்னை எதிர்த்து நிற்கும்போது, அவன்மாத்திரம் தன்னை ஆதரிக்கவேண்டுமென்ற அவசியமிருப்பதாகத் தெரியவில்லை.

நல்லமுத்து, வழக்கப்படி, தான் உண்மையே கூறுவதாயும், உண்மையைத் தவிர வேறெதுமில்லை என்றும், உறுதிமொழி எடுத்துக் கொண்டான்.

பெற்கொண்டு, நல்லமுத்துவுக்கும் சர்க்கார் உதவி வக்கீலுக்கும் என்ன வாக்குவாதம் நடக்கப்போகிறதோ என்று உற்றுக் கவனிக்க ஆரம்பித்தான், ஆறுமுகம்.

“மிஸ்டர் நல்லமுத்து! நீங்கள் முதலாளிகள் குடும்பம் ஒழிக்கப்பட வேண்டும் என்று பேசியதுண்டா?”

அந்த ஹாலில் இருந்த அத்தனை பேருக்கும் ஆச்சரியத்தைக் கொடுத்தது, அந்தக் கேள்வி.

கொஞ்சம் தைரியத்தை வரவழைத்துக்கொண்டு பதில் கூற ஆரம்பித்தான், நல்லமுத்து.

“எல்லோரும் ஓர் குலம் என்ற நம்பிக்கையில் இருப்பவன்......”

“சார்! இது பொதுமேடையல்ல பிரசங்க மாரி பொழிய. தயவு செய்து கேட்ட கேள்விக்கு உண்டு இல்லை! என்று நேரடியான பதிலைக் கூறுங்கள். ஹூம்; இப்பொழுது கூறுங்கள். நீங்கள் முதலாளிகளின் குடும்பத்தைப் பூண்டோடு ஒழித்துவிடுவதாகக் கூறியது உண்டா?”

“இல்லை......”

“பின்......?”

“முதலாளித்துவம் ஒழிக்கப்பட வேண்டுமென்பதுதான் எங்கள் கொள்கையே ஒழிய, தனிப்பட்ட முதலாளிகளின் குடும்பங்களை ஒழிப்பதல்ல”

“ரொம்பச் சரி; நீங்கள் சீர்திருத்த சங்கத்தில் உறுப்பினரா?”

“ஆம்”

“புரட்சிக் கழகத்தில் மிகவும் சுறுசுறுப்பாக வேலை செய்பவர் தானே?”

“ஆம்”

“சந்தர்ப்பம் வரும்போதெல்லாம் தனிப்பட்ட முதலாளிகளைக் கொலை செய்துகூட அகற்றலாம் என்பது உங்கள் கட்சியின் அந்தரங்க கொள்கைகளில் ஒன்றுதானே?”

“சுத்தப் பைத்யக்காரத்தனமான வாதம் இது”

“இல்லை; கோர்ட்டில் கேட்கப்பட வேண்டிய கேள்விகள். பதில் கூற பிரியமிருந்தால் பதில் சொல்லும். ஆமாம், கொலை நடந்த அன்று பகல், நீங்கள் ஆறுமுகத்தைச் சந்தித்தீர்களா?”

“சந்திக்கநேரிட்டது”

“அதற்குமுன் தங்களுக்கு ஆறுமுகத்தைத் தெரியாதா?”

“நிச்சயமாகத் தெரியாது”

“அடையாற்றிலே உங்களோடு உண்ண அவனையும் அழைத்தீர்களாமே?”

“ஆம்”

“முன்பின் தெரியாத கார் டிரைவரை, அதுவும் ஆதித்திராவிடனையா உங்களோடு சாப்பிட அழைத்தீர்கள்?”

“மனித இனம் பூராவும் ஒன்று என்று எண்ணுபவன் நான். அதுவும் தாழ்த்தப்பட்ட சமூகத்தின் பேரில் எனக்கு ஒரு அலாதியான பிரியம் உண்டு”

“இருக்கலாம். ஆனால், அந்த நேரத்தில் ஆறுமுகத்தைக் கூப்பிடவேண்டிய அவசியமே இல்லை. சரி, கூப்பிட்டீர்கள்; என்னதான் பேசிக்கொண்டிருந்தீர்கள்?”

“சேரி வாழ்வோர் சீர்திருத்தத்தைப்பற்றி”

“இந்தக் கல்வி வாசனையற்ற குடிசை தாங்கியோடா...?”

“அவன் குடிசை தாங்கியாக இருக்கலாம். ஆனால், அவன்தான் இந்நாட்டின் அஸ்திவாரம், தெரியுமா?”

“எதையோ கூறுங்கள். நீங்கள் கொடுத்த பிரசுரங்கள்தானே இவை” என்று கூறிக்கொண்டே மேஜைமீதிருந்த கம்யூனிசப் பிரசுரங்களை எடுத்துக் காண்பித்தார் மகாலிங்கம்.

“ஆம்”

“இந்தப் பிரசுரங்களில் விளக்கப்பட்டிருப்பது என்ன?”

“ஏழைகள் வாழ்வு உயர மார்க்கம் கூறப்பட்டிருக்கிறது”

“முதலாளிகள் ஒழிக்கப்பட வேண்டுமென்று எழுதி இருக்கிறதா?”

“முதலாளித்துவம்......”

“எப்படியிருந்தால் என்ன? முதலாளிகளை ஒழிக்காமல் முதலாளித்வம் எப்படிப் போகும்?”

“ஒழிப்பது என்ற வார்த்தையைத் தவறாகக் கருதக்கூடாது”

“அது அவரவர் அறிவுக்கு ஏற்ற வண்ணம் புரிந்துகொள்வர். அதிருக்கட்டும். ஆறுமுகத்தைப் பழம் சாப்பிட அழைத்திருந்தால், ஆதித்

திராவிடர்களின் வீட்டில் நீங்கள் சாப்பிடுவதுண்டா?"

"என்னை அன்போடு அழைப்பவர் யார் வீட்டிற்கும் போகத் தயங்குவதே இல்லை"

"அப்படியானால், ஆதித் திராவிடர்கள்மேல் உங்களுக்கு ஒரு தனிப் பிரியமா?"

இதற்குள் நெடுமாறன் எழுந்தார்.

"யுவர் ஹானர்! இது என்ன நீதிமன்றமா, இல்லை, அரசியல் பட்டி மன்றமா? இந்தச் சாட்சியை இப்படிச் சம்பந்தமற்ற கேள்விகள் கேட்டுப் பொதுமக்களின் மனதில் கோபத்தையும், வெறுப்பையும் கிளறுவதைத் தவிர வேறென்ன இலாபம்?"

உடனே மகாலிங்கம், "இல்லை, நான் கேட்பவை பொதுமக்களுக்காக அல்ல. நீதியை வழங்குபவருக்குத் தெரிந்திருக்க வேண்டிய சில விஷயங்களைத்தான் விளக்கினேன். அதுமாத்திரமில்லை. இந்த நல்லமுத்துவுக்கும் அந்த ஆறுமுகத்திற்கும் எந்தளவு தொடர்பு என்பதை நாம் நிச்சயித்தாகவேண்டும்"

நெடுமாறன் பேசாமல் உட்கார்ந்தார்.

மகாலிங்கம் மறுபடியும் ஆரம்பித்தார்.

"அடையாற்றில் ஆறுமுகத்தோடு தாங்கள் பேசிய பேச்சுகள்தான் இந்தக் கொலைக்கு பெரும் அளவு காரணம்; ஒத்துக்கொள்கிறீர்களா?"

"சேச்சே! இது சுத்த அபாண்டம்"

"அன்றிரவு பாக்யபவனம் வருவதாகக் கூறி, ஆறுமுகத்தை இந்தக் கோரச் சம்பவத்தை செய்யுமாறு கூறியது வாஸ்தவமா?"

"வீண் பழி. இந்த மாதிரி சதிச் செயல் செய்யும் ஆள் அல்ல, நான்"

"அதை நாங்கள் முடிவுசெய்து கொள்வோம். ஆனால் நீர் கொடுத்த பிரசுரங்களைப் படித்தபின் அவன் எப்படிச் சும்மா இருக்கமுடியும்"

"அதில் ஒன்றும் கொலை செய்யச் சொல்லவில்லையே"

"இருக்கலாம்; பச்சை உள்ளத்தோடு இருப்பவன், அறிவுவளர்ச்சி அற்றவன், அதைப் படித்தால் இந்த முடிவுக்குத்தான் வருவான்"

"அதை நான் கொஞ்சம்கூட எதிர்பார்க்கவில்லை, நீங்கள் கூறுவது சரியென்றும் படவில்லை"

"அதெப்படி ஒத்துக்கொள்வீர்கள். எல்லாம் போகப் போகத் தெரியும். ஆமாம், உத்தமநாத டெக்ஸ்டைல்ஸ் வேலை நிறுத்தத்தை நீங்கள்தானே நடத்திவருகிறீர்கள்?"

"ஆம்"

"அங்கு தொழிலாளிகள் எத்தனை பேர்?"

"13,000 பேர்"

"மாதாமாதம் தொழிற்சங்கத்திற்கென்று பணம் வசூல் செய்கிறீர்களா?"

"செய்கிறோம், ஆனால் எல்லாவற்றிற்கும், ஆடிட் செய்த அக்கவுண்ட் இருக்கிறது!"

"இருக்கட்டும், இருக்கட்டும். இந்த வேலைநிறுத்தம் தோல்வியுற்றால், தொழிற்சங்கம் உடைந்துவிடுமா?"

"ஏன் தோல்வி ஏற்படுகிறது? ஏன் உடைகிறது?"

"ஒருவேளை வேலை நிறுத்தம் முறிந்துபோனால்........"

"அதைப்பற்றிக் கவலையில்லை. ஒரு தடவை தோல்வியடைந்தால் மறு தடவை வெற்றியடைகிறோம்"

"ஹும். வேலைநிறுத்தம் தோல்வியடைந்தால், தொழிலாளிகள் யார் பக்கம் நிற்பார்கள் என்று யாருக்குத் தெரியும்!"

நல்லமுத்து, பேசாமல் நின்றுகொண்டிருந்தான்.

சில நிமிடங்கள் தன் பேப்பர் கட்டுகளைப் பார்த்துவிட்டு, "நீங்கள் போகலாம்" என்றார்.

நல்லமுத்து இறங்கி, தன் இடத்தில் போய் அமர்ந்தான்.

அதன் பின் ஆறுமுகம் கண்டிராத பலபேர்வந்து சாட்சிசொல்லிப் போயினர். டாக்டர்கள், பத்திரிகை நிருபர்கள், போலீஸ்காரர்கள் இப்படி பல துறைகளிலிருந்தும் வந்து சாட்சி கூறினர். ஒவ்வொருவரும் ஆறுமுகம் இதைச் செய்தான், இங்கே பார்த்தோம், இப்படிப்பட்டவன், இவன் செய்ததின் பலன் இது என்று விளக்கிவிட்டுப் போயினர்.

இந்தச் சாட்சிகள் எல்லாம் முடிந்தவுடன் கடைசியாகச் சர்க்கார் உதவிவக்கீல் எழுந்து "இப்பொழுது, ஆறுமுகம் விசாரிக்கப்படுவான்!" என்றார்.

உடனே கோர்ட்டு பூராவும் ஒரே கலகலப்பு, எல்லோரும் ஒருமிக்க ஆறுமுகத்தின் பக்கம் திரும்பினர்.

ஆறுமுகம் அப்படியே நடுங்கிப்போய் நெடுமாறன் பக்கம் திரும்பினான். உடனே நெடுமாறன் எழுந்து ஆறுமுகத்தினருகில் வந்து நின்றுகொண்டு, "ஆறுமுகத்தின் வக்கீல் என்ற முறையில் கூறுகிறேன்; அவன் இங்கு விசாரிக்கப்பட வேண்டியதில்லை. ஹைகோர்ட்டில் நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்!" என்றார்.

"அவனை இங்கே விசாரித்தால் உத்தமநாதர் கொலைக்கு மேலும் நல்ல ஆதாரம் கிடைக்கலாம்!"

"இல்லை. இங்கு விசாரிக்கத் தேவையில்லை. அதுவும் அவன் போலீஸ் பாதுகாப்பில் இருக்கும் போது........"

"சரி, சரி! மேல் கோர்ட்டில் பார்த்துக்கொள்ளுங்கள்!", என்று கூறிவிட்டு வெளியே போனார் மகாலிங்கம்.

நெடுமாறன் ஆறுமுகத்தின் முதுகைத் தட்டி, "பயப்படாதே, ஆறுமுகம்! இதெல்லாம் வீண் மிரட்டல்!" என்றார். ஆறுமுகத்திற்கு ஒரு அசட்டுச் சிரிப்பு வந்தது—பல்லிளித்தான்.

இந்த நேரத்தில் வெளியேபோன சர்க்கார் வக்கீல் திரும்ப உள்ளே வந்தார். அவர் பின்னே நீண்ட மேஜை ஒன்றைத் தள்ளிக்கொண்டு வந்தனர் நாலு போலீஸ்காரர்கள். கோர்ட்டிலிருந்த எல்லோரும் ஆச்சரியத்தோடு அந்த மேஜைமேல் மூடப்பட்டிருக்கும் பொருள் என்னவென்று ஆவலோடு நோக்கினர். ஆறுமுகம் மறுபடியும் பயந்து எழுந்தான்.

நெடுமாறனும் திகைத்துப் பார்த்தார்.

மகாலிங்கம் முன்வந்து, "நீதிபதி அவர்களே! இதுவரை ஆறுமுகத்தின் நிலையையும் அவன்தான் உத்தமநாதரைக் கொலை செய்திருக்க வேண்டுமென்பதற்கான சாட்சிகளையும் கேட்டீர்கள். இந்த வழக்கில் சிக்கிய பொருள்களையும் பார்த்தீர்கள். கடைசியாக இப்பொழுது ஒரு சாட்சிப்பொருளைக் காண்பிக்கப் போகிறேன். இப்படிப்

பட்ட கோரச் செயலைப்புரியும் ஆறுமுகம், ஏன் உத்தமநாதரைக் கொன்று குழிதோண்டிப் புதைத்திருக்கமாட்டான் என்பதை நீங்களே புரிந்து கொள்ளுங்கள்!” என்று கூறிக்கொண்டே மேஜை அருகில் வந்து அதன் மேல் இருந்த வெள்ளைத் துணியை ‘டக்’கென்று விலக்கினார்.

ஐயோ! அந்த வினாடியே “ஓ!” என்று அங்கிருந்த அனைவரும் அடிவயிற்றிலிருந்து எழுந்த சத்தத்தை பெருமூச்சாக விட்டனர்.

பிணமாக்கப்பட்ட பொன்னியின் சவம் அங்கே கோரமாக வைக்கப்பட்டிருந்தது. அதன் மேல் சுற்றப்பட்டிருந்த துணி குறைவு. தலையும் கழுத்தும் பயங்கரமாகக் காட்சியளித்தன. கோர்ட்டிலிருந்த பலர் சட்டென்று கண்ணை மூடிக்கொண்டனர்.

“இதோ இந்தக் கோரச் சம்பவத்திற்குக் காரணம், அந்த ஆறுமுகம், அவன் எதைத்தான் செய்யமாட்டான்?” என்று கத்தினார்.

“தைரியமாக இரு; ஆறுமுகம்!” என்று தட்டினார் நெடுமாறனார்.

“இந்தப் பிணத்தை வைத்துக் கொண்டு அவர்கள் என்ன செய்கிறார்கள்?” என்றான்.

நெடுமாறன் எதுவும் பதில் கூறவில்லை. முன்னால் சென்று “யுவர் ஹானர்! கோர்ட்டிலே சாட்சியம் கூற இந்தளவு காட்டுமிராண்டித்தனமான முறை தேவையா? பொன்னியைக் கொலை செய்ததை ஆறுமுகமே ஒத்துக் கொண்டிருக்கிறான்!” என்றார்.

இதற்குள் மகாலிங்கம், “பொன்னியைப் பற்றி விளக்க இந்த உடல் இங்கு கொண்டு வரப்படவில்லை. உத்தமநாதரின் உயிரைக் குடித்தவன் எப்பேர்ப்பட்டவன் என்பதை எடுத்துக்காட்டத்தான்!”

“ஆறுமுகம் தான் எல்லாவற்றையும் ஒத்துக் கொள்கிறானே! இனி ஏன் இந்த அர்த்தமற்ற முறைகள்?”

“அதை வழக்கு நடத்தும் நாங்கள் கவனித்துக் கொள்கிறோம்.”

நெடுமாறன் பேசாமல் திரும்பவும் ஆறுமுகத்தினருகில் வந்தார்.

ஆறுமுகம், தனக் கெதிராகப் பிணம் கூடப் பேசுவதை எண்ணி ஏங்கிய வண்ணம் கீழே உட்கார்ந்தான்.

அவனுடைய உடல் குளிர்ந்து உறைந்தே போனது. இரத்த ஓட்டம் கூட நின்றுபோகும் உணர்ச்சி ஏற்பட்டது. சேச்சே! பொன்னியின் உடல் எவ்வளவு கேவலமான நிலையில் அங்கு கிடத்தப்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம் அவன் தானே. இவ்வளவு நாட்களாகப் பொன்னியின் ஞாபகமே அவனுக்கு வரவில்லை. கிருஷ்ணசாமி கேட்டபோது கூட அவள் ஞாபகம் வந்து மறைந்தது. ஆனால் பொன்னியின் மேல் அவனுக்கு ஆசையில்லை என்று அர்த்தமில்லை. உத்தமநாதரைக் கொலை செய்த பழிக்கு ஆளானோம் என்றவுடன் உலகத்தையே மறந்து விட்டான் அவன். இப்பொழுது பொன்னியின் சவம் சாட்சியாக வருகிறது. அவளைக் கொலை செய்ததற்கு அவனை யாரும் எதுவும் கேட்கவில்லை. ஒரு வேளை அவன் இனத்தில் ஒரு உயிர் போவது, மாளிகை வாசிகளின் உல்லாச வாழ்க்கைக்குத் தொல்லை தரும் ஒரு ஜீவன் ஒழிந்தது போல் கருதப்படும் போலிருக்கிறது.

அவளுடைய சடலத்தைக் காண்பித்து, அவனுடைய கோர சொரூபத்தை எடுத்துக் காண்பிக்கின்றனர், சர்க்கார். மாளிகை வாசி ஒருவரையும், மண் குடிசையில் வாழ்ந்த ஒருத்தியையும் அவன் கொலை செய்த போதிலும், முன்னவரைக் கொலை செய்ததற்காகத் தான், அவன் தண்டிக்கப்படப்போகிறான். அந்தச் சேரி வாழ்ந்தவள் ஒரு **சாட்சி தான்**. ஆமாம், வெறும் சாட்சி. இதை நினைக்க, நினைக்க ஆறுமுகத்தின் நெஞ்சு குமுறியது. உண்மையாகச் செய்த **கொலை** ஏமாந்து மாட்டிக் கொண்ட வழக்கில் சாட்சி. திரும்பத், திரும்ப நடுவில் கிடத்தப்பட்டிருந்த பொன்னியைப் பார்த்தான். சேச்சே! எவ்வளவு பெரிய தவறு செய்திருக்கிறான். அவள் உயிரோடிருந்திருந்தால், இந்த மாதிரி வழக்கு நடக்கும்போது என்னபாடுபட்டிருப்பாள். ஆனால் இப்பொழுது எதை நினைத்து என்ன பயன்?

அவனுக்கு அமைந்த வாழ்க்கைப் பாதை அப்படி! ஆம்! அவனாகச் சிந்தித்துத் தெளிவோடு அமைத்துக்கொண்ட பாதை அல்ல! மாளிகைவாசிகள் அவனுக்காக அமைத்துவைத்திருந்தனர். பிறந்தான். பிண்டத்திற்குப் போராடினான். மனதில் தோன்றியதைச் செய்தான். அவன் மனதை மாளிகை வாசிகள் கட்டுப்படுத்தினர். ஆகவே அவர்களுக்குப் பயந்து வாழ்க்கையிலிருந்து ஒதுங்கிக்கொண்டேபோனான். கடைசியில் பாதாளத்தில் விழுந்தான். ஆனால் அங்கும் அந்த அக்கிரமக்காரர்கள் அவனை விடவில்லை. பொன்னியின் பிணத்தோடு வந்து, அவனை இன்னும் ஆழத்தில் அமுக்கினர்.

பிறந்ததிலிருந்து இறப்புவரை இந்த மாளிகைவாசிகளின் ஆதிக்கத்தின் கீழ், மண் குடிசையினர் வாழ்ந்து மடியவேண்டியிருக்கிறது. இதைத்தான் பொன்னி கூறினாள், அந்தப் பிணக்கோலத்தில்! தாங்க முடியாத உணர்ச்சியொன்று தோன்றியது ஆறுமுகத்திற்கு— கண்ணை மூடிக்கொண்டான். உலகமே இருண்டது. பிணம் பேசிக் கொண்டே இருந்தது! (தொடரும்)

நான் வணங்கும் தெய்வம்

★

காடுகளை அழித்து நாடாக்கிப் பயிரேற்றியவர்கள்.

நதிகளுக்குக் குறுக்கே அணை கட்டியவர்கள்.

பாலங்கள் போட்டவர்கள்,

கால்வாய்கள், ரயில் பாலங்கள் கண்டவர்கள்.

கப்பல் கட்டியவர்கள்.

யந்திரங்கள் அமைத்தவர்கள்.

தந்திகள், கம்பியில்லாத் தந்திகள், மின்சாரம் கண்டுபிடித்தவர்கள்.

தறிகளையும் கதிர்களையும் உண்டாக்கியவர்கள்.

அறிவை வளர்க்கும் அச்சு யந்திரம் கண்டுபிடித்தவர்கள்.

நோய்கள் தடுப்பதற்கும் நீக்கத் துக்கும் வழி கண்ட மருத்துவர்கள்.

வானமண்டல உண்மைகளைக் கண்டறியும் ஆராய்ச்சியாளர்கள்.

இதயம் இன்பம் பெற இன்னிசை பாடிடுவோர், கவிதாமணிகள்.

நெஞ்சு நெகிழவைக்கும் ஓவியக் கலைஞர்கள்.

வாழ்வின் செம்மைக்கான வசதி தேடித்தரும் உற்பத்தியாளர்கள்.

இங்கர்சால்.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

சர்க்கார் செலுத்தவேண்டிய வட்டி மட்டும், 84-கோடி ரூபாயாகும்; ஏறத்தாழ, சர்க்காரின் வருமானத்தில் ஐந்திலோர் பகுதி.

இது, பெரும் பாரம்—பெரியதோர் பொறுப்பு—என்பதை எந்தப் பொருளாதார நிபுணரும் கூறுவர்—ஒரு காங்கிரஸ் அரசியல்வாதியும் ஒப்புக்கொள்ள மாட்டார்!

கடன் கேட்டார் நேரு — மக்கள் கொடுத்தனர் — மூவாயிரம் கோடி என்ன, முப்பதினாயிரம் கோடி கேட்டாலும் தருவர்—என்று முழக்கமிடுவர், புள்ளி விவரத்தை மறந்து, சொல்லழகில் இலயித்திடும் பேச்சாளர்கள்.

இந்தக் கடன் திருப்பித் தரப்பட வேண்டும்!

வட்டி செலுத்திக்கொண்டு வரப்பட வேண்டும்!

வட்டியோ, 84 கோடி!

இது என்ன பிரமாதம்! கடனாக வாங்கியுள்ள பணத்தைக் கங்கையிலா கொட்டிவிட்டோம், கணவாய்களைச் செப்பனிட்டோம், காட்டாறுகளைக் கட்டுப்படுத்தினோம், பிரம்மாண்டமான நீர்த் தேக்கங்கள், பெரும் பெரும் தொழிற்சாலைகள் அமைத்துள்ளோம்—இவைமூலம் ஏராளமான 'இலாபம்' கிடைக்கிறது, அதைக் கொண்டுதான், வட்டியுடன் கடனைப் பைசல் செய்யத் திட்டமிட்டிருக்கிறோம் என்று விவரம் கூறுவோர் சிலர் உளர். கடன் கொடுத்த மங்கம்மாளிடம் கடன் வாங்கிய கனவான், தீட்டிய திட்டங்கள் பாழ்பட்ட பரிதாபக் கதை கூறியதுபோல, ஆகிவிட்டால் ......?

நினைத்தாலே நடுக்கமெடுக்கும்!!

திட்டங்கள் தீட்டுவதில், இந்திய சர்க்கார் காட்டும் ஆர்வம், அதை நிறைவேற்றும்போது குறைகிறது என்பதும், ஒவ்வொரு முக்கியமான திட்டத்தின் நிர்வாகத்திலும் ஊழல் தலைவிரித்தாடுகிறது என்பதும், உலகறிந்த இரகசியம்.

இது நிலைமை! 3014 கோடி ரூபாய் மக்களிடம் கடனாகப் பெற்றிருக்கிறது, சர்க்கார்.

நேரு பண்டிதரிடம் நம்பிக்கை இருக்கிறது —அவர்போல் நம்பிக்கையைப் பெறுவதற்கு வாய்ப்புப் பெற்ற தலைவர் வேறு யார் இருக்கிறார்கள்! ஆனால், அவரால், இவ்வளவு பெரிய கடனைக்கொண்டு, தீட்டப்படும் சுபீட்சத் திட்டத்தில், ஊழலும் ஊதாரித்தனமும், திறமைக் குறைவும், தில்லுமல்லும், ஏற்படாதபடி தடுக்க முடிந்ததா? இல்லை!! ஒவ்வோர் நாளும் ஒரு நாற்றம் வெளிவருகிறது!!

சர்க்கார் திட்டப்படி, தொழில்கள்—வருவாய் தரத்தக்க வாய்ப்புகள் நடந்தேறினால், கிடைக்கும் ஆதாயம், போடப்பட்டுள்ள மூலதனத்துக்கு நூற்றுக்கு இரண்டரைக்கும் சற்று குறைவான அளவு வட்டி கட்டக்கூடியதாக அமையும் —ஊழலும் ஊதாரித்தனமும் திறமைக் குறைவும் திடீர் நஷ்டமும் ஏற்படாதிருந்தால்!! கிடைக்கக் கூடியது நூற்றுக்கு இரண்டரை, கடனுக்குத் தரப்படவேண்டிய வட்டி விகிதமோ, நூற்றுக்கு மூன்றரை!

இது நிலைமை! களிப்பூட்டும் செய்தியா, கலங்கவைக்கும் செய்தியா என்பதைக் கருத்துள்ளவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டுகிறோம். இவ்வளவு பெரும் தொகை கடனாகப் பெற்று, பெரியதோர் சுமையை ஏற்றிக்கொண்டிருக்கிறது, இந்திய சர்க்கார். இந்தக் கடனுக்கு வட்டிதர, சர்க்கார் நம்முடைய வரிப் பணத்தில் 'கைவைத்தே' தீரவேண்டி வருகிறது. நிலைமை அது. இவ்வளவு பெரிய சுமையைத் தாங்கிக் கொள்வது, எவ்வளவு பெரிய ஆபத்து என்பதை எண்ணும்போதுதான், நமக்குக் கடன் பெற்ற கனவான், கடன் தந்த காரிகையிடம் பேசும் காட்சி, மனக்கண்முன் தெரிந்தது.

*

3014 கோடி!!

சர்க்கார் வருமானத்தைப் போல 7 மடங்கு அதிகம்! வட்டி மட்டும், 84 கோடி ரூபாய்!

பாண்டிய நாடு தகப்பன் தரணி,
மலர்புரி தாய் நாடு,
சோழநாடு வளர்ப்புத் தந்தையூர்!
இவ்வளவு பெற்ற நடன ராணி
நாடோடியாகத் திரிந்தாள்?
ஏன்?
கடைசியில் கலிங்க ராணியாகிறாள் எப்படி?
இதன் விளக்கமே
அண்ணாவின்
கலிங்க ராணி
விலை ரூ. 3—0—0

நாவலர் இரா. நெடுஞ்செழியன் எழுதிய
பண்டைக் கிரேக்கம்
விலை ரூ. 1—0—0

திராவிடப் பண்ணை
தெப்பக்குளம், திருச்சி

Edited, Printed & Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press,
95, Tirukkachinambi St, Kancheepuram.